வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No.: P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 18.06.2025 புதன்கிழமை இதழ் : 169 பக்கங்கள் : 12




## வடக்கு மனித புதைகுழிகள் வதந்திகளால் உருவானவை

# நடவடிக்கை எடுக்க அரசு தயாரில்லை!

- மண்டைதீவு புதைகுழிக்கு வதந்தியே அடிப்படை
- மன்னாரில் மீட்கப்பட்ட எலும்புகள் புளோரிடாவுக்கு



கொழும்பு, ஜூன் 18

**"வடக்கில் பல மனித புதைகுழிகள் உள்ளன என்று வெளியான தகவல்கள் வதந்திகளை அடிப்படையாகக் கொண்டவை. சரியான விசாரணைகள் இல்லாமல் அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராக இல்லை" - இவ்வாறு நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

நேற்றைய தினம் பாராளுமன்றில், "1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் மண்டைதீவில் சுமார் 60 பேர் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் கோரிக்கை விடுத்திருந்தார்.

அவருக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அத்துடன், மண்டைதீவில் உள்ள மனித புதைகுழிகள் குறித்து வெளியிடப்படும் தகவல்கள் வதந்திகளை மட்டுமே அடிப்படையாகக் 11

## மண்டைதீவு படுகொலைகளுக்கு டக்ளஸ் தேவானந்தாவும் உடந்தை

### சிறீதரன் எம். பி. சபையில் தெரிவிப்பு



கொழும்ப, ஜூன் 18

மண்டைதீவில் நடத்தப்பட்ட மனித படுகொலைகளுக்கு முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவும் உடந்தையாக இருந்துள்ளார். எனவே, அவரிடமும் விசாரணைகள் நடத்தப்படவேண்டும் - என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற குழுத் தலைவர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் நீதி அமைச்சரிடம் வாய்மொழிமூல கேள்வி ஒன்றை எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், 11

## இரத்த வாந்தி எடுத்த குடும்பஸ்தர் மரணம்!

யாழ்ப்பாணம், ஜூன் 18

இரத்த வாந்தியெடுத்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

நெடுந்தீவு 3ஆம் வட்டாரத்தை சேர்ந்த இராமநாதன் முத்துலிங்கம் (வயது 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

குறித்த குடும்பஸ்தர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இரத்த வாந்தி எடுத்துள்ளார். இதையடுத்து, 11

## மயங்கி விழுந்து இளைஞர் மரணம்!

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜூன் 18

கேக் உண்டு பின் தேநீர் அருந்திய இளைஞர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் - கந்தர்மடம் - புகையிரத நிலைய வீதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் கேதீஸ்வரன் எனோசாந் (வயது 20) என்பவரே உயிரிழந்தவராவார்.

வீட்டிலிருந்த இளைஞர் 11

அரியாலையில் மீட்கப்பட்ட

## மூன்று எலும்புக்கூடுகள் குழந்தைகளுடையவை!

### பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 18

அரியாலை சித்துப்பாத்தி மனித புதைகுழியில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட 19 எலும்புக்கூடுகளில் 3 எலும்புக்கூடுகள் பிறந்த குழந்தைகளுடையவை அல்லது 10 11

## எரிபொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 18

நாட்டில் எரிபொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்று அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். 11

## பருத்தித்துறை நகர சபை காங்கிரஸின் வசமானது!

- சி.தில்லைநாதன், த.பிரதீபன் -

வடமராட்சி, ஜூன் 18

பருத்தித்துறை நகர சபை தவிசாளராக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் வின்சன் டீ போல் டக்ளஸ், உப தவிசாளராக தேவசிகாமணி தேவராசேந்திரன் ஆகியோர் தெரிவாகினர்.

பருத்தித்துறை நகர சபையின் தவிசாளர், உப 11

## பாராளுமன்றிலிருந்து எதிர்க்கட்சி வெளிநடப்பு

கொழும்பு, ஜூன் 18

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன சர்வாதிகாரமாக செயல்படுகிறார் என்று குற்றஞ்சாட்டி ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சியின் எம். பிக்கள் நேற்று பாராளுமன்றிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

"மத்திய கிழக்கு நெருக்கடி குறித்து கேள்வி 11

## தண்டவாளத்தில் இருந்த இளைஞர் ரயில் மோதி பலி!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜூன் 18

ரயில் தண்டவாளத்தில் அமர்ந்திருந்த இளைஞர் ரயில் மோதியதில் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை மாலைவேளை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் அரியாலையை சேர்ந்த தளையசிங்கம் சுதாகரன் (வயது 20) என்பவரே 11

பருத்தித்துறை பிரதேச சபை:

## தமிழ் அரசு கட்சியின் யுகதீஸ் தவிசாளராக ஒருமனதாக தெரிவு

- சி.தில்லைநாதன், த.பிரதீபன் -

வடமராட்சி, ஜூன் 18

பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளராக இலங்கை தமிழ் அரசு கட்சியின் உதயகுமார் யுகதீஸ் போட்டியின்றி ஒருமனதாக தெரிவானார்.

பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளரை தெரிவு செய்வதற்கான கூட்டம் நேற்று அதன் சபா மண்டபத்தில் வடக்கு மாகாண 11

## யாழில் சர்வதேச தரத்தில் உள்ளக விளையாட்டரங்கம்!

### அமைச்சர் சந்திரசேகர்

கொழும்பு, ஜூன் 18

யாழ்ப்பாணத்தில் சர்வதேச மைதானம் மட்டுமல்ல சர்வதேச தரத்திலான உள்ளக விளையாட்டரங்கும் அமைக்கப்படவுள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 11

## முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளுக்கு மட்டுப்பாடு!

### எம். பிக்களின் ஓய்வூதியமும் நிறுத்தப்படும்

கொழும்பு, ஜூன் 18

முன்னாள் ஜனாதிபதிகள், அவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை மட்டுப்படுத்தவும், பாராளுமன்ற உறுப்பினர்களின் 11

## கரவெட்டி பிரதேச சபையும் தமிழ் அரசு கட்சியின் வசம்!

- சி.தில்லைநாதன், த.பிரதீபன் -

வடமராட்சி, ஜூன் 18

வடமராட்சி தெற்கு, மேற்கு (கரவெட்டி) பிரதேச சபையின் தவிசாளர், உபதவிசாளர் பதவிகளை இலங்கை தமிழ் அரசு கட்சி வென்றுள்ளது. இதன்படி, தவிசாளராக குமாரசாமி சுரேந்திரன், உப தவிசாளராக தியாகராசா தயாபரன் ஆகியோர் தெரிவாகினர். 11

**உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ. பி. டி. பியின் ஆதரவு எங்களுக்கு வேண்டாம்

## தீவக தமிழ் அரசு உறுப்பினர்கள் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

தீவகத் தொகுதிக்குட்பட்ட நெடுந்தீவு, வேலணை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச சபைகளில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவைப் பெற்று ஆட்சியமைப்பதை மக்கள் விரும்பவில்லை என்பதால் நாம் தனித்து ஆட்சியமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என மேற்குறித்த மூன்று சபைகளுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்கள் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளனர்.

தமிழ் அரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தீவகத்தின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும், கட்சியின் தீவகத் தொகுதிக் கிளை உறுப்பினர்களும் தொகுதிக் கிளைத் தலைவர் மாணிக்கவாசகர் இளம்பிறையன் தலைமையில், பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரனை நேற்று முன்தினம் அவரின் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இதனைத் தெரிவித்துள்ளனர்.

ஈழ விடுதலைப் போராட்டத்தைச் சிதைப்பதற்காகவும், அந்தப் போராட்டத்துக்கு எதிராகவும் வலிந்து செயற்பட்ட ஈ. பி. டி. பியினரும் அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும் தீவக மக்கள்மீது மேற்கொண்ட அராஜகங்களை மறந்து, தவிசாளர் - உப தவிசாளர் பதவிகளுக்காக அவர்களோடு இணைய முற்பட்டால் மக்களுக்கும் எமக்கும் இடையிலான இடைவெளிகள் அதிகரிக்கும் எனக் குறிப்பிட்ட மேற்படி உறுப்பினர்கள், அதனைத் தவிர்த்து சபைகளில் தனித்து ஆட்சியமைப்பது குறித்து கலந்துரையாடினர் - என தெரிவிக்கப்பட்டது.

(அ)



# வவுனியாவிலும் எரிபொருளுக்கு மக்கள் நீண்டவரிசையில் காவல்


வவுனியா, ஜூன் 18

ஈரான் - இஸ்ரேல் மோதலையடுத்து வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் எரிபொருளுக்காக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றனர்.

வவுனியாவின் நகரம், அதன் புறநகர் பகுதிகளில் உள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார் நிரப்பு நிலையங்களில், எரிபொருளை பெற்றுக்கொள்ள மக்கள் அதிகளவில் கூடிவருவதால் அந்தந்த நிலையங்களில் நீண்ட வரிசைகள் ஏற்பட்டுள்ளன.

(ஐ-10)

# கடற்படைக்கு காணி சுவீகரிப்பு மக்கள் எதிர்ப்பால் இடைநிறுத்தம்



முல்லைத்தீவு, ஜூன் 18

சிலாவத்தையில் மக்களுக்கு சொந்தமான 2 ஏக்கர் காணியை கடற்படைக்கு சுவீகரிப்பதற்காக அளவீட்டு பணிகளை மேற்கொள்ள வந்த அதிகாரிகளுக்கு எதிராக மக்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த சுவீகரிப்பு தொடர்பில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரால் காணி உரிமையாளர்களுக்கு காணி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக அதிகாரிகள், அரச நிலஅளவையாளர் கி. கிருஷ்ணராசா, சிலாவத்தை கிராம சேவையாளர் உள்ளிட்ட அதிகாரிகள் குறித்த இடத்துக்கு வருகை தந்த போது காணியின் உரிமையாளர்கள் மக்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதையடுத்து காணி அளவிடும் முயற்சி நிறுத்தப்பட்டது.

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று - சிலாவத்தை கிராமத்தில் சிலாவத்தை கடற்படை முகாம் 2009 ஆண்டு போருக்கு பின்னர் மக்களுக்கு சொந்தமான 2 ஏக்கர் காணியில் நீண்டகாலமாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள

# பலாலி வீதி வழியாக பொதுமக்கள் இரவு 7 மணி வரை பயணிக்கலாம்!

யாழ்ப்பாணம், ஜூன் 18

இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள பலாலி வீதி ஊடாக மக்கள் காலை 6 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை போக்குவரத்து செய்யமுடியும் என்று தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பலாலி வீதியானது வயாவிளான் சந்தியில் இருந்து பருத்தித்துறை - பொன்னாலை வீதி வரையிலான சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் பலாலி இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் காணப்பட்ட நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் குறித்த வீதியானது காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை மக்களின் போக்குவரத்துக்காக திறந்து விடப்பட்டது.

இந்த நிலையில் போக்குவரத்துக்கான அனுமதியை இரவு 7 மணி வரை நீடித்து தர வேண்டும் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரனிடம் மக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து, அவர் இது தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவிடம் கோரிக்கை முன்வைத்தார். இந்த நிலையில், இது தொடர்பில் இராணுவ அதிகாரியிடம் கலந்துரையாடப்பட்டு வீதியின் போக்குவரத்து இரவு 7 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது - என்றும் தெரிவிக்கப்பட்டது.

# யாழ். வந்த பிரித்தானியாவின் தூதருடன் சுமந்திரன் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள இலங்கைக்கான பிரித்தானிய தூதுவரை தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் சந்தித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை குறித்த சந்திப்பு நடைபெற்றது.

மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடர் சம்பந்தமாக நீண்ட உரையாடலில் ஈடுபட்டதாக சுமந்திரன் தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

(ஐ)

# செம்மணி புதைகுழி அகழ்வாய்வில் வெளிப்படை தன்மை அவசியம்!

## ரவிகரன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 18

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வாய்வுகள் முழுமையாக மேற்கொள்ளப்படுவதுடன், அகழ்வாய்வுகளில் வெளிப்படைத்தன்மை அவசியம் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் உரையாற்றியபோதே இவற்றைத் தெரிவித்த அவர், மேலும் கூறியவை வருமாறு,

செம்மணி மனித புதைகுழியிலிருந்து இது வரை 19 முழுமையான மனித எலும்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்தப் புதைகுழியை எதிர்வரும் 20ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக 45 நாட்களுக்கு அகழ்வு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான உத்தரவு நீதிமன்றத்தால் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தப் புதைகுழியை அகழ்வு செய்து உரிய வகையில் விசாரணைகளை மேற்கொண்டு உண்மை நிலைமை கண்டறியப்பட வேண்டும். இந்த விட யத்தில் அரசாங்கமானது உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்தப் புதைகுழியில் அடையாளம் காணப்பட்டுள்ள எலும்புக்கூடுகளை வைத்துப் பார்க்கும்போது சிறுவர்கள், பெண்கள் அடித்துக் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வலுவடைந்துள்ளது.

இதனைவிட அடையாளம் காணப்பட்டுள்ள எலும்புக்கூடுகளில் ஆடைகள் அணிந்திருந்தமைக்கான சான்றிதழ்கள் இல்லை என்றும் கூறப்படுகின்றது. எனவே, இந்த சடலங்கள் நிர்வாணமாக புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. திட்டமிட்ட வகையில் படுகொலை செய்யப்பட்ட பின்னர் சடலங்கள் இங்கு புதைக்கப்பட்டிருக்கலாம் என்றே கருதவேண்டியுள்ளது.

செம்மணி பகுதியில் புதைகுழிகள் உள்ள விடயம் கடந்த 1999ஆம் ஆண்டு வெளிப்படுத்தப்பட்டிருந்தது. சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமி கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்ட 6 இராணுவத்தினருக்கு ட்ரயல் அட்பார் நீதிமன்றம் மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளித்திருந்தது. இதில், பிரதான சந்தேகநபரான இராணுவ லயன்ஸ் கோப்ரல் சோமரத்ன நீதிமன்றத் தீர்ப்பையடுத்து, செம்மணி பகுதியில் இராணுவத்தினரால் 600பேர்வரையில் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டனர் என்ற தகவலை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்த விவகாரமானது அன்று பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. செம்மணியில் அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட விவகாரம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இதனையடுத்து, செம்மணி புதைகுழி தோண்டும் நடவடிக்கை அன்று இடம்பெற்றிருந்தது. லயன்ஸ் கோப்ரல் சோமரத்ன அடையாளம் காட்டிய சிலபகுதிகள் அந்தவேளையில் அகழப்பட்டன. அதில் 25 எலும்புக் கூடுகள் வரையில் மீட்கப்பட்டிருந்தன.

அதன்பின்னர் இந்த நடவடிக்கை கிடப்பில் போடப்பட்டது. தற்போது செம்மணி பகுதியில் அகழ்வு இடம்பெற்றதையடுத்து மீண்டும் புதைகுழியொன்று அடையாளம் காணப்பட்டிருக்கிறது.

எனவே, இந்த புதைகுழி அகழ்வுக்கான சகல ஏற்பாடுகளையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். இதற்கான சகல ஒத்துழைப்புகளையும் அரசாங்கம் வழங்க வேண்டும். அகழ்வுச் செயல்பாட்டை நிறுத்தாது இதனை முழுமைப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
18.06.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## புதிய அரசாங்கத்தின் புதிய அரசமைப்பு

"புதிய அரசமைப்பை இயற்றுவது பற்றி இன்னும் தீர்மானம் எட்டப்பட வில்லை", என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவிருத்திக்கிறார். இலங்கையில் புதிய அரச மைப்பு என்பது ஒரு புதிர் போன்றது. அதாவது, அது எப்போது வரும் - வந்தால் எப்படியிருக்கும் என்பதெல்லாம் அவரவர் ஊகங்கள் தொடர்பான ஒன்றாகவே தொடர்கிறது.

காலத்துக்குக் காலம் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசப்படுவது உண்டு. இலங்கையின் ஒற்றையாட்சி அரசியல் யாப்புத்தான் அனைத்து அரசியல் அவலங்களுக்கும் காரணம் என்றும் அது மாற்றப்பட வேண்டும் என்னும் பார்வை அவ்வப்போது மேல் வருவதும் பின்னர் போதிய ஆதர வின்றி முயற்சி பிற்போடப்படுவதும் வழமையான ஒன்றாகவே தொடர்கி றது. சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் புதிய அரசியல் யாப்பு முயற்சி ஒன்று பற்றி விவாதிக்கப்பட்டது.

நீலன் திருச்செல்வம், ஜீ. எல். பீரிஸ் தலைமையிலான தீர்வாலோசனை வரைவு ஒன்றும் வெளியானது. ஆனால், அது அடுத்த கட்டத்துக்கு நகர்த் தப்படவில்லை. இலங்கையின் ஆட்சியாளர் ஒருவர் உள்நாட்டுக்குள் மேற்கொண்ட ஆகச்சிறந்த தீர்வு முயற்சியாக அது நோக்கப்பட்டது. ஆனால், அது நடைமுறைக்கு வரவில்லை. அரசியலில் தாராளவாதியாக நோக்கப்படும் ரணில் விக்கிரமசிங்க சந்திரிகாவின் முயற்சிக்கு ஆதரவு வழங்கவில்லை.

2002இல் மேற்கொள்ளப்பட்ட சமாதான உடன்பாடு ஒப்பீட்டு அடிப் படையில் இணக்கப்பாட்டின் அடிப்படையில் முன்னேற்றகரமான தீர்வு ஒன்றைக் காண்பதற்கான கதவைத் திறந்தது. ஆனால், அதுவும் கைகூட வில்லை. இந்தநேரத்தில் அப்போது இந்திய வெளிவிவகார அமைச்சராக இருந்த ஜஸ்வந்த் சிங் கூறிய ஒரு விடயம் பின்னர் நோர்வேயின் சமா தான தூதுவரான எரிக் சொல்ஹெய்மால் பதிவு செய்யப்பட்டது. அதாவது, "நீங்கள் பத்து வருடங்களை இலங்கையில் செலவழித்தால்கூட பிரச் னைக்கான தீர்வைக் காணமாட்டீர்கள்", என்று ஜஸ்வந்த் சிங் குறிப்பிட் டிருக்கிறார். சொல்ஹெய்ம் இந்திய தரப்பை முதன்முதலாக சந்தித்த போதுதான் ஜஸ்வந்த் சிங் அவ்வாறு கூறியிருக்கிறார். அவர் கூறியது எந்தளவு சரியானது என்பதை தான் பின்னர் உணர்ந்து கொண்டாரென சொல்ஹெய்ம் பதிவு செய்திருக்கிறார்.

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது மீளவும் புதிய அரசியல் யாப்பு தொடர்பான நம்பிக்கை ஊட்டப்பட்டது. ஆனால், அரசியலை யதார்த்தமாக நோக்கியவர்கள், "புதிய அரசமைப்பு என்னும் மாயமானுக்கு பின்னால் செல்வது பயனற்றது. எனவே, அதற்குப் பதிலாக அரசமைப்பில் இருப் பதை முன்னிறுத்தி சிந்திப்பதே சரியானது", என்பதை சுட்டிக்காட்டிய போதும் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாயமானை துரத்திக் கொண்டிருந்தது - அதற்கு விளக்கமளித்துக் கொண்டிருந்தது. ஐந்து வருடங்களின் பின்னர் புதிய அரசியல் யாப்பு முயற்சி ஒரு மாயமான் என்பதை அனைவரும் உணர்ந்து கொண்டனர்.

தேசிய மக்கள் சக்தி ஒருவேளை புதிய அரசியல் யாப்பு முயற்சி ஒன்றை ஆரம்பித்தாலும் அதுவும் இறுதியில் மாயமானை துரத்துவதில் தான் முடிவுறும். ஆனால், அப்போதும் தமிழ் அரசு கட்சி ஒரு வேளை தேசிய மக்கள் சக்தியின் மாயமானை துரத்தும் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கலாம். ஏனெனில், சட்டத்தரணிகளாக இருந்து அரசியலில் பிரவே சித்தவர்கள் இவ்வாறான விடயங்களில் பங்கு கொள்வதை பெருமையாக எண்ணிக்கொள்ளலாம். ஆனால், கடந்த எழுபத்தைந்து வருட கால தென்னிலங்கை அரசியல் கூறும் வரலாறோ தெளிவானது. அதாவது, தமிழர் பிரச்னைக்கு தீர்வு காணும் நோக்கில் ஒரு புதிய அரசமைப்பை சிங்கள ஆட்சியாளர்கள் கொண்டுவரப் போவதில்லை. ஒரு வேளை அவ்வாறான ஒன்று சாத்தியப்பட்டால் நிச்சயம் இருப்பதும் இல்லாமல் போகும் ஆபத்தே நிகழும். பதின்மூன்றே அதிகமென்று வாதிடப்படும் சூழலில் அதற்கப்பால் ஆட்சியாளர்கள் சட்டரீதியில் செல்வார்கள் என்பதெல்லாம் கற்பனைக்கு அழகானது.

# கொழும்பு மாநகர சபை உறுப்பினர்மீது தாக்குதல்!

கொழும்பு, ஜூன் 18

கொழும்பு மாநகர சபையின் உறுப்பினர் சந்தமாலி உலுவிடகேமீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலில் காயமடைந்தவர் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாநகர சபை உறுப்பினரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

சந்தமாலி உலுவிடகே, கொழும்பு மாநகர சபை கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் தனது பணிமனைக்கு சென்றிருந்தபோதே அவர் மீது குழு ஒன்று தாக்குதலை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இலங்கைக்கென தனித்துவமான உணவு பாதுகாப்பு குறியீட்டை உருவாக்க திட்டம்!

கொழும்பு, ஜூன் 18

அடுத்த மூன்று மாதங்களுக்குள் இலங்கைக்கு என்று தனித்துவமான உணவுப் பாதுகாப்பு குறியீட்டை உருவாக்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

உலக உணவுப் பாதுகாப்புக் குறியீடு போன்ற குறியீடுகள், இலங்கையின் முழுமையான உணவு பாதுகாப்பு நிலைமையை சரியாக பிரதிபலிப்பதில்லை. அத்துடன், கிடைக்கக்கூடிய தரவுகள் போதுமானவையாக இல்லை அல்லது துல்லியமாக இல்லை என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் உரிய கொள்கை ரீதியான முடிவுகளை எடுப்பது சிரமமாக உள்ளது.

எனவே, அடுத்த ஐந்து ஆண்டுகளில் இலங்கையில் உணவு பாதுகாப்பு தொடர்பான முன்னுரிமைகள் மற்றும் இலக்குகளை அடையாளம் கண்டு சரியான கொள்கை ரீதியிலான முடிவுகளை எடுப்பதற்காக இந்தப் புதிய உணவுப் பாதுகாப்புக் குறியீடு உருவாக்கப்படவுள்ளது.

இதன் ஆரம்ப கட்டமாக, "இலங்கைக்கு பொருத்தமான உணவுப் பாதுகாப்பு குறிகாட்டியை இனங்காணுதல் மற்றும் மூலோபாயத் திட்டமொன்றை தயாரித்தல்" தொடர்பான செயலமர்வு நேற்று கொழும்பில் நடந்தது.

உணவு மற்றும் விவசாய அமைப்பு மற்றும் உலக உணவுத் திட்டம் ஆகியவற்றுடன் இணைந்து உணவுப் பாதுகாப்பு நிபுணர் குழு இந்த செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலர், சிரேஷ்ட பேராசிரியர் புத்தி மாரம்பே, சிரேஷ்ட பேராசிரியர் ஜீவிகா வீரஹேவா மற்றும் உணவு பாதுகாப்பு நிபுணர் குழு உறுப்பினர்கள், அரச நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், உணவு மற்றும் விவசாய அமைப்பு, உலக உணவுத் திட்டம் மற்றும் தனியார் துறை பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# "தூய இலங்கை என்பது அனைவரின் வாழ்க்கை முறையாக மாறவேண்டும்!"

கொழும்பு, ஜூன் 18

ஒவ்வொரு அதிபரும் தமது பாடசாலையில் தூய இலங்கை (கிளீன் சிறீலங்கா) திட்டத்தை முழு நாட்டுக்கும் முன்னுதாரணமாக நடைமுறைப்படுத்த வேண்டும். தூய இலங்கை என்பது நாட்டில் உள்ள அனைவரினதும் வாழ்க்கை முறையாக மாற வேண்டும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சு மற்றும் தூய இலங்கை திட்டத்தின் அதிகாரிகளுடன் அலரி மாளிகையில் நடந்த உரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "நாங்கள் இப்போது செய்ய முயற்சிப்பது சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே செய்யப்பட்டிருக்க வேண்டிய ஒன்று. எனவே, இதை இன்னொரு திட்டமாக அவசர அவசரமாக செய்ய வேண்டிய அவசியமில்லை. எமக்கு இன்னும் காலம் இருக்கிறது.

தூய இலங்கை என்பது வெறுமனே சுத்தம் செய்வது மட்டுமல்ல. தூய இலங்கை என்பது நாம் வாழும் சூழலை, நமது சிந்தனை முறை, அணுகுமுறைகள் மற்றும் நடத்தைகளுடன் சேர்த்து தூய்மையாக வைத்திருப்பது பற்றியதாகும்.

தூய இலங்கை என்பது எம் அனைவரினதும் வாழ்க்கை முறையாக இருக்க வேண்டும். நமது எதிர்கால சந்ததியினரை, குறிப்பாக மாணவர் சமூகத்துக்கு அதைப் பழக்கப்படுத்த விரும்புகிறோம், அதனால்தான் பாடசாலைகளுக்கு வாழ்க்கை முறை திட்டத்தை அறிமுகப்படுத்துகிறோம்.

பாடசாலை பிள்ளைகள், பெற்றோர்கள், முப்படைகள் தூய இலங்கை திட்டத்துக்கு தன்னார்வத்துடன் ஆதரவளிக்கும் பல தரப்பினரை ஈடுபடுத்துவதன் மூலம் ஏற்கனவே ஏராளமான திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளன.

தூய இலங்கை திட்டத்தை பாடசாலைகளுக்கு அப்பால் தொழில் நுட்பக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கும் கொண்டு செல்ல வேண்டும். இது ஒரு தனிநபரையோ அல்லது ஒரு குழுவையோ இலக்காகக் கொண்டு நடத்தப்படும் தற்காலிக திட்டம் அல்ல. முழு நாட்டையும் இலக்காகக் கொண்டு நடத்தப்படும் ஒரு பெரும் தேசிய திட்டத்தின் ஆரம்ப கட்டமாகும். இந்த அனுபவங்களிலிருந்து நாம் கற்றுக்கொண்டு, நமது தவறுகளையும் குறைபாடுகளையும் சரிசெய்து முன்னோக்கிச் செல்வோம்", என்றார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பிரபலங்களால் ஆதாயம் உண்டு. உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். எதிர்பார்த்த நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள். நினைத்தது நிறைவேறும்.

**இடபம்**
ஆன்மிக பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள் உத்தியோகத்தில் உங்கள் புது முயற்சிகளை ஆதரிப்பார்.

**மிதுனம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். மரியாதை கூடும்.

**கடகம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் பழைய கசப்பான சம்பவங்கள் நினைவுக்கு வரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**சிம்மம்**
கணவன் மனைவிக்குள் ஆரோக்யமான விவாதங்கள் வந்து போகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். நம்பிக்கை பிறக்கும் நாள்.

**கன்னி**
சமயோசிதமாகவும் சாதுரியமாகவும் பேசி காரியம் சாதிப்பீர்கள். பயணங்கள் சிறப்பாக அமையும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

**துலாம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் வேண்டாம். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துக் கொள்வீர்கள். புது பொறுப்புகள் தேடி வரும். புதுமை படைக்கும் நாள்.

**விருட்சிகம்**
கடந்த கால இனிய நினைவுகளை நினைத்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத உதவிகள் கிடைக்கும் நாள்.

**தனுசு**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். சொந்த பந்தங்கள் தேடி வந்துப் பேசுவார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

**மகரம்**
இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். புதிய பாதை தெரியும் நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வுமனப்பான்மை தலை தூக்கும். சக ஊழியர்களால் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். சகிப்பு தன்மை தேவைப்படும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். எதிலும் கவனம் தேவைப்படும்.

# யாழ். இந்தியத் துணைத் தூதுவருடன் மாநகர முதல்வர் மதிவதனி சந்திப்பு

*யாழ்ப்பாணம், ஜூன் 18*

யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளியுடன் யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராஜா சந்தித்தார்.

இந்திய அரசு ஆதரவு வழங்கும் திட்டங்கள் யாழ்ப்பாணம் மற்றும் வடமாகாணத்தில் எவ்வாறு செயல்படுகின்றன என்பதையும் இந்தப் பகுதிகளின் முன்னேற்றத்துக்கு மேலும் எவ்வாறு இணைந்து செயல்படலாம் என்பதையும் இரு தரப்பினரும் விவாதித்தனர்.

யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்த இருக்கும் எதிர்காலத் திட்டங்களை முதல்வர் பகிர்ந்தார். இதனை வரவேற்ற துணைத் தூதுவர், யாழ்ப்பாண மக்களின் நலனுக்கும் வளர்ச்சிக்கும் இந்தியா தொடர்ந்து உறுதுணையாக இருக்கும் என்பதை மறுபடியும் உறுதியளித்தார்.




# யாழ்ப்பாணத்தில் ஓய்வூதியர்கள் கௌரவிப்பு





*யாழ்ப்பாணம், ஜூன் 18*

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 16 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், சிறப்பு விருந்தினர்களாக பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரன், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஆ. சத்தியமூர்த்தி, கிளிநொச்சி மாவட்ட பகிரங்க சேவைகள் ஓய்வூதியர்கள் சங்கத்தின் தலைவர் சி. சந்திரராஜா, கௌரவ விருந்தினராக ஓய்வூதிய அலுவலர் ஜே. பிரதீபன் ஆகியோர் பங்குபற்றினர்.

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக மூத்த ஓய்வூதியர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

(எ)

# திருவிளையாடல் புராணச் சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், ஜூன் 18*

சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு சிறீ நாகதம்பிரான் ஆலயத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் -10 எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதி முனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசன் நிகழ்த்தும் "உக்கிர குமாரனுக்கு வேல்வளை செண்டு கொடுத்த படலம்" என்னும் சொற்பொழிவும் நடைபெறும்.

இதேவேளை, சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

(எ)

# கிளிநொச்சியில் விவசாய குழுக்கூட்டம்

*கிளிநொச்சி, ஜூன் 18*

கிளிநொச்சி மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான விவசாயக் குழுக் கூட்டம் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இதில், கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கை தொடர்பாகவும் ஏனைய விவசாயத் துறைசார்ந்த பல்வேறு விடயங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன.

அத்துடன் விவசாயத்துறைசார் அபிவிருத்திகள் தொடர்பில் துறைசார்ந்து தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), பிரதேச செயலாளர்கள், கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், நீர்ப்பாசன பொறியியலாளர், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், நீர்ப்பாசன பொறியியலாளர்கள், துறை சார்ந்த பல்வேறு திணைக்களங்களின் அதிகாரிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள்களின் விலை அதிகரிக்கும் சாத்தியம்!

## இஸ்ரேல் - ஈரான் மோதலின் விளைவு

**கொழும்பு, ஜூன் 18**

**எரிபொருள் விலை எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்திற்குள் அதிகரிப்பதற்கான சாத்தியம் உள்ளதாக உயர் அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.**

இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான மோதலின் விளைவாக, சர்வதேச சந்தையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் காரணமாக இந்த விலை அதிகரிப்பு ஏற்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் பாரிய அளவிலான எரிபொருள் உற்பத்தியாளராகச் செயற்படும் நிலையில், உலகளாவிய விநியோகத்தில் சுமார் 3 சதவீதத்தைக் கொண்டுள்ளது.

இந்தநிலையில், இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான மோதல் ஆறாவது நாளை எட்டியுள்ள நிலையில், மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 73.42 அமெரிக்க டொலராக பதிவு செய்துள்ளது.

எனினும், ஜூன் மாத இறுதியில் எரிபொருள் விலைத்திருத்தம் மேற்கொசினையாக அமையாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக மேற்கொள்ளப்பட்ட கொள்முதல் கட்டளைகளுக்கமைய, முந்தைய விலையிலேயே தற்போது எரிபொருள் கொள்வனவு செய்யப்படுகிறது.

எனவே, எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்முதல் கட்டளைகளுக்கு மாத்திரமே விலை அதிகரிப்பு சாத்தியமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ)

# ஜே.வி.பி. அரசுடன் சேர்ந்திருந்த கால விவரங்களை கோருகிறார் தயாசிறி!

கொழும்பு, ஜூன் 18

2004 முதல் 2008 வரை காலப் பகுதியில் ஜனாதிபதி நிதியத்திலிருந்து 5 லட்சம் ரூபாவைவிட அதிகமாக பெற்ற அரசியல் பிரமுகர்கள் மற்றும் தனிப்பட்ட நபர்களின் பெயர் பட்டியலை வெளியிடுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கோரியுள்ளார்.

தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவில் அதிகாரபூர்வமாக இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக இந்த தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

2008 முதல் 2024 வரை பெற்றவர்களின் பட்டியல் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் அதற்கு முந்தைய 2004-2008 இடைப்பட்ட நாலாண்டு காலம் தவிர்க்கப்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த காலத்தில் மக்கள் விடுதலை முன்னணி ஆட்சி கூட்டணியில் இருந்த காலமாக இருப்பதால், அவர்களும் நிதி பெற்றிருக்க வாய்ப்பு உள்ளதாகவும் தயாசிறி தெரிவித்தார்.

இந்த விவரங்கள் மக்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதனால்தான் அந்த நான்கு ஆண்டுகளுக்கான ஜனாதிபதி நிதியத்திலிருந்து நிதி பெற்றவர்களின் பெயர்கள் உடனடியாக வெளியிடப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், தற்போது தகவல் அறியும் ஆணைக்குழு தலைவர் மற்றும் இயக்குநர் இல்லாமல் செயல்படுகிறது என்றும், இக்குழுவை செயலற்றதாக மாற்றுவதற்கு தற்போதைய அரசாங்கம் முயற்சி செய்கிறது என்றும் தயாசிறி ஜயசேகர குற்றம்சாட்டியுள்ளார். (அ)

# மீண்டும் சுதந்திர கட்சி சந்திரிகா வசமாகிறது?

கொழும்பு, ஜூன் 18

சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தை மீண்டும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கையேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மீண்டும் கட்சியை பொறுப்பேற்று கட்டியெழுப்புமாறு, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் அடிப்படையில் 1994 முதல் 2005 வரை, சுதந்திரக் கட்சியின் தலைவராக, சிறிசேன பதவி வகித்த காலத்தில், அதனை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகளை திரும்பப் பெற சந்திரிகா உடன்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுள்ளது. (அ)

# இலங்கை வரலாற்றில் அதிர்ஷ்டசீட்டில் மிகப்பெரிய பரிசு தொகை வென்ற நபர்

கொழும்பு, ஜூன் 18

இலங்கை வரலாற்றில் இதுவரை இல்லாத அளவு மிகப்பெரிய அதிஷ்ட இலாப சீட்டு பரிசு தொகை வெல்லப்பட்டுள்ளது. 47 கோடியே 45 லட்சத்து 99 ஆயிரத்து 422 ரூபாய் என்ற அதிக பரிசுத் தொகையே வெல்லப்பட்டுள்ளது.

கொக்கரெல்ல பகுதியைச் சேர்ந்த முகவர் ஒருவர், இந்த அதிஷ்ட சீட்டை விற்பனை செய்துள்ளார்.

எனினும் வெற்றியாளர் யார் என்பது அறிவிக்கப்படவில்லை.

முன்னதாக, இதுவரை இலங்கையில் அதிஷ்ட இலாபச் சீட்டு வரலாற்றில்,230 மில்லியன் ரூபாய் வெற்றிகொள்ளப்பட்ட அதிக பரிசுத் தொகையாக இருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# கொத்தலாவல பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட பிரச்னை குறித்து கேள்வி

கொழும்பு, ஜூன் 18

கொத்தலாவல பல்கலைக்கழக வைத்திய பீடப் பிரச்னை மற்றும் கல்விமாணி பாடநெறி சார்ந்து எழுந்துள்ள பிரச்னை என்பவற்றை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

நிலையியற் கட்டளை 27ஃ2 இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலவசக் கல்வி சீர்திருத்தங்களின் முதன்மை நோக்கம், அனைத்து இலங்கை குடிமக்களுக்கும் பாகுபாடு இல்லாமல் கல்வி வாய்ப்புகளை வழங்குவதாகும். அதாவது, அனைவருக்கும் இலவசக் கல்வி கிடைப்பதை உறுதி செய்தல், இலவசக் கல்விக்கு அப்பால், ஒவ்வொரு நபருக்கும் போதுமான தரம் கல்வி கிடைப்பதை உறுதி செய்தல் என்பன ஆகும். தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையிலும் இலவசக் கல்வியும் சமவாய்ப்பையும் ஒரு அடிப்படைக் கொள்கையாக ஏற்றுக் கொள்கிறது என்று கூறுகிறது, ஆனால் அது அதற்கு முரணான முறையில் செயல்பட்டு வருகிறது. இதனையே அவதானிக்க முடிக்கிறது. ஆனபடியால், இந்த விடயத்தை தெளிவுபடுத்திக் கொள்ளும் முகமாக பின்வரும் கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன்.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் நிர்மாணத்திற்காக இலங்கை அரசாங்கம் இதுவரை செலவிட்டுள்ள தொகை எவ்வளவு?

இந்தப் பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பட்டம் பெறும் மாணவர் செலுத்த வேண்டிய பாடநெறிக் கட்டணங்கள் மற்றும் ஒவ்வொரு மாணவருக்கும் அரசாங்கம் செலவிடும் தொகை குறித்து தனித்தனியாக இந்தச் சபைக்கு அறிவிப்பீரா?

2025 முதல் கடேட் அல்லாத உள்நாட்டு மருத்துவ மாணவர்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படாமைக்கு ஏதுவான காரணங்கள் யாவை? மருத்துவ மாணவர்களுக்கு பயிற்சி வழங்கத் தேவையான விசேட மருத்துவர்கள் பற்றாக்குறை நிலவுவதாக வரும் செய்திகளுக்குப் பின்னால் உள்ள உண்மைத் தன்மை யாது? அப்படியானால், வெளிநாட்டு மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது இந்த விசேட மருத்துவர்களின் பற்றாக்குறை அதற்கு பாதிக்காமல் இருப்பதை அரசாங்கம் எவ்வாறு உறுதி செய்ய முடியும்?

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு அரசாங்கத்தால் நிதி ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள சூழலில் கெடட் அல்லாத உள்நாட்டு மருத்துவ மாணவர்களை இந்தப் பல்கலைக்கழகத்தில் சேர்க்காமல் இருப்பதன் மூலம், சமவாய்ப்பில் கல்வி பெறும் உரிமையை மாணவர்கள் இழக்காமல் இருப்பதை அரசாங்கத்தால் எவ்வாறு உறுதி செய்ய முடியும்? -என்றார். (அ)

# இந்திய - இலங்கை உடன்பாட்டுக்கு எதிரான மனுவை விசாரிப்பதற்குத் திகதி அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 18

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் அண்மையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செல்லுபடியற்றதாக்க உத்தரவிடக் கோரி, தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுவை விசாரிப்பதற்கு உயர் நீதிமன்றம் திகதியிட்டுள்ளது.

இந்த மனு நேற்று மூவரடங்கிய நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போது, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி மன்றாடியார் நாயகம் நிர்மலன் விக்னேஸ்வரன், மனு தொடர்பாக அமைச்சரவையிடம் ஆலோசனை பெற்று, சமர்ப்பணங்களை முன்வைப்பதற்குத் திகதியொன்றை வழங்குமாறு கோரினார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதியரசர்கள் ஆயம், குறித்த மனுவை எதிர்வரும் ஒகஸ்ட் 4 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத் திகதியிட்டுள்ளது.

இந்த மனுவை வைத்தியர் குணதாச அமரசேகர உள்ளிட்ட குழுவினர் தாக்கல் செய்துள்ளதுடன், சட்டமா அதிபர், பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் அமைச்சரவை ஆகிய தரப்பினர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம், இலங்கையின் இறைமை [illegible] மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டுக்குத் தீங்கு விளைவித்துள்ளது எனவும், அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காமல் கையெழுத்திட அரசாங்கம் எடுத்த நடவடிக்கை முற்றிலும் சட்டத்திற்கு முரணானது எனவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# 2025 முதல் காலாண்டில் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 4.8 வீதமாக பதிவு!

கொழும்பு, ஜூன் 18

இந்த ஆண்டின் முதல் காலாண்டில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 4.8 சதவீதமாக பதிவாகியுள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, விவசாய நடவடிக்கைகள் 0.7 சதவீதமாக சரிவைப் பதிவு செய்துள்ளது.

இருப்பினும், தொழில்துறை மற்றும் சேவைப் பொருளாதார நடவடிக்கைகள் முறையே, 9.7 சதவீதமாகவும், 2.8 சதவீதமாகவும் வளர்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# கொழும்பில் ஏற்படும் மாற்றங்கள் அடுத்த ஆறு மாதங்களில் தெரியும்

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 18

கொழும்பில் ஏற்படும் மாற்றத்தை எதிர்வரும் ஆறு மாதங்களுக்குப் பின்னர் அவதானிக்க [illegible] பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

அத்துடன், கொழும்பு மாநகர சபையின் வருமானம் கடந்த காலங்களில் கொழும்பு மக்களுக்கு முழுமையாக செலவிடப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், கொழும்பு மாநகர சபையின் அனைத்து வருமானமும் எதிர்காலத்தில் மக்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கு மோதல் இலங்கைக்கும் பாதிப்பு

## பேராசிரியர் கணேசமூர்த்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 18

**உலகளாவிய எரிபொருள் விலை உயர்வு இலங்கை பொருளாதாரத்தில் தாக்கங்கள் ஏற்படுத்தும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறையின் மூத்த பேராசிரியர் கணேசமூர்த்தி, தெரிவித்துள்ளார்.**



இது வாழ்க்கைச் செலவில் ஒட்டுமொத்த தாக்கத்தை ஏற்ப டுத்தும் என அவர் குறிப்பிட் டுள்ளார்.

முக்கிய எண்ணெய் பாதை யான மத்திய கிழக்கில் ஏற்படும் மோதல், அதிக காப்பீட்டு பிரீ மியங்கள் போன்ற காரணங்க ளால் விலை உயர்வைத் தூண் டும் என்று அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-இறக்குமதியாளராக இலங்கை, இயற்கையாகவே உள்ளூர் விலைகளை அதற் கேற்ப சரிசெய்ய வேண்டியிருக் கும் என அவர் குறிப்பிட்டுள் ளார். எண்ணெய் விலை உயர்ந் தவுடன், அது மற்ற பொருட்க ளின் அதிகரிப்புக்கு வழிவகுக்கும்.

எரிபொருள் விலைகள் இது விகிதாசாரத்திற்கு மாறாக நடக்கும். விலைகள் குறையும் போது, அதை செய்வதில்லை. சமீபத்தில், விலைகள் குறைந்தன.

எனினும் இலங்கையில், வர்த்தகர்கள் தங்கள் பொருட்க ளின் விலையை அதற்கேற்ப குறைக்கவில்லை. எரிபொருள் விலைகள் உயரும்போது, அது நேர்மாறாக இடம்பெறுகின்றது.

மத்திய வங்கி அடுத்த இரண்டு காலாண்டுகளுக்குள் பணவீக்கத்தை 5 சதவீதமாக இருக்க திட்டமிட்டிருந்தாலும், மோதலின் விளைவாக எரி பொருள் விலை உயர்வு ஏற்பட் டால் அது மாற்றமடையும்-என்றார். (அ)

## கிராமப்புற சுற்றுலா தலங்களை மேம்படுத்த அரசு நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 18

உள்ளூர் சுற்றுலா சேவை வழங்குநர்களின் திறனை அதிக ரிப்பை மேற்கொள்வதற்காக கிராமப்புற சுற்றுலா தலங்களை இலக்காக கொண்ட சுற்றுலா மேம்பாட்டை நோக்கி அரசாங் கம் செயற்பட்டு வருவதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

சீன - இலங்கை மாலை தீவு சுற்றுலா மன்றத்தின் ஏற்பாட் டில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-இந்த மாநாட்டின் முக்கிய தொலைநோக்குப் பார்வை, சுற்றுலாவை பொருளாதார வளர்ச்சியின் உந்துசக்தியாக மட்டுமல்லாமல், மக்களிடை யேயான தொடர்பு, கலாசார புரிதல் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு ஆகியவற்றைக் கொண்ட தெற்காசிய பிராந்தி யத்தை உருவாக்குவதாகும்.

சீனா அதன் பரந்த மற்றும் பன்முகத்தன்மை கொண்ட நிலப்பரப்புகள், பல நூற் றாண் டுகள் பழமையான பழங்கால தளங்கள் மற்றும் தனித்துவ மான நவீன நகரங்கள் மூலம் மில்லியன் கணக்கான சுற்று லாப் பயணிகளை ஈர்க்கிறது.

புனித நகரமான அனுராதபு ரத்திலிருந்து சீகிரியா கோட்டை வரை, தெற்கின் தங்கக் கடற்கரைகள் முதல் மத்திய மலைநாட்டின் மூடுபனி மூடிய தேயிலைத் தோட்டங்கள் வரை, இலங்கை தனித்துவமான அனுபவங்களை வழங்குகிறது.

நமது நாட்டில், வருமா னத்தை ஈட்டுவது மட்டுமல் லாமல், நமது சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்கும், நமது கலாச்சாரங்களை மதிக் கும் மற்றும் நமது மக்களை அதிகாரம் அளிக்கும் ஒரு சுற் றுலாத் துறையை எவ்வாறு உருவாக்குவது என்பதில் அர சாங்கம் தற்போது கவனம் செலுத்தி வருகிறது. இந்த விட யத்தில் இலங்கைக்கு பிராந்திய ரீதியான ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது.

இது விசா நடைமுறைகளை எளிதாக்க, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தரங்களை சீரமைக்க, கூட்டு சந்தைப்படுத்தல் வர்த் தகத்தை அபிவிருத்தி செய்ய மற்றும் சர்வதேச முதலீட்டை ஈர்ப்பதற்கான பொதுவான தளங்களை இதன் ஊடாக உரு வாக்க முடியும்.

சுற்றுலாத் துறையை கிரா மப்புற சமூகங்களைச் சென்ற டையும், பெண் தொழில்முனை வோரை ஆதரிக்கும் மற்றும் இளைஞர்களின் பங்கேற்பை ஊக்குவிக்கும் சுற்றுலாத் துறையாக மாற்றுவதே எங்கள் குறிக்கோள்-என்றார். (அ)

## முன்னறிவித்தலின்றி மின்னிணைப்பை துண்டிப்பது மின்சார சபையின் சதியா?

### எதிர்கட்சி எம்.பி. சபையில் கேள்வி

கொழும்பு, ஜூன் 18

முன்னறிவித்தல் குறுஞ் செய்தி இன்றி மின்னிணைப்பை துண்டிக்கும் விடயத்தை மின் சார சபை திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்வதான என்ற சந்தே கம் எழுந்துள்ளதாக எதிர்கட் சியின் பாராளுமன்ற உறுப்பி னர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித் துள்ளார்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கூடியது. இதன் போதுஎழுப்பப்பட்ட வாய்மூல கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மின் பாவனையாளர்களில் மின் கட்டணம் குறுஞ்செய்தி சேவைக்கு பதிவு செய்துள்ளவர் களில் சிமார்ட் போன் இல் லாதவர்கள் அந்த கட்டண விபரத்தை அறிந்து கொள்ள முடியாத நிலைமையே காணப் படுகின்றது.

மின்சாரம் என்பது அத்தியா வசிய விடயமாகும். ஆகவே குறுஞ்செய்தி சேவையில் பதிவு செய்தவர்களுக்கு மின் துண்டிப்பு இடம்பெறும் எனின் முன்னறிவித்தல் தகவ லொன்றை வழங்க முடியுமா என வினவ விரும்புகின்றேன்.

ஏனெனில் மினசார இணைப்பை திடீர் என துண்டிக்கப்படும் பட்சத்தில் 3000 வரையில் அபராத பணத்தையும் செலுத்தியே மீண்டும் அவர்களுக்கு மின் இணைப்பை பெற்றுக்கொள்ள கூடிய சூழல் காணப்படுகின் றது. ஆகவே மின் துண்டிப்புக் கான அபராத பணமாக மேல திக தொகையை பெற்றுக்கொள் ளும் நோக்கில் மின்சாரசபை திட்டமிட்ட ரீதியில் இந்த விடயத்தை மேற்கொள்வதான சந்தேகம் எழுந்துள்ளது.

ஆகவே முன்கூட்டிய அறிவித்தலை வழங்குவதற்கு தொலைபேசி அழைப்பொன்றை மின்பாவனையாளர்களுக்கு மேற்கொள்ளுமாறு தெரிவித் துக்கொள்ள விரும்புகின்றேன்-என்றார். (அ)

## இரு விபசார விடுதிகள் சுற்றிவளைப்பு

கொழும்பு, ஜூன் 18

களுத்துறையில் வாதுவை நகரத்தில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கிய இரண்டு விபசார விடுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவ ளைப்பில் 10 பெண்கள் உட்பட 11 பேர் வாதுவை பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ள னர்.

வாதுவை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவ ளைப்பின்போதே சந்தேக நபர் கள் கைதுசெய்யப்பட்டுள்ள னர்.

கைது செய்யப்பட்டவர் களில் மசாஜ் நிலையத்தின் உரி மையாளரும் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

20 முதல் 50 வயதுக்குட் பட்ட 10 பெண்களே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், வர்த்தகர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து மசாஜ் நிலையம் என்ற போர்வையில் விபச்சார விடுதி களை நடத்தி வந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரி யவந்துள்ளது. (அ)

## கொழும்புக்கு கடந்தப்பட்ட 4,294 கிலோ கழிவு தேயிலை!

கொழும்பு, ஜூன் 18

கம்பளை பகுதியில் இருந்து கொழும்புக்கு கடத்தப்பட்ட 4 ஆயிரத்து 294 கிலோ கழிவு தேயிலை கைப்பற்றப்பட்டுள் ளது.

பூவெலிகட தெல்லங்க பகு தியில் வைத்து நேற்று முன் தினம் அதிகாலை 2 மணிக்கு கம்பளை விஷேட அதிரடிப் படை முகாம் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதோடு , நபர் ஒருவரையும் கைது செய் துள்ளனர்.

தவுலகல, பூவெலிகட, தஸ் கர, வெலம்பொட, வட்டதெ னிய போன்ற பகுதிகளில் இப்ப டியான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றன என்ற குற்றச்சாட்டு உள்ளது.

மேற்படி கழிவு தேயிலை களை பல்வேறு இரசாய னங்க ளைப் பயன்படுத்தி நிறம் மாற் றப்பட்டு நல்ல தேயிலைகளு டன் கலப்படம் செய்து உள் நாட்டு வெளிநாட்டு சந்தைக ளில் விற்பனை செய்யப் பட்டு வருவதாகவும் , மேற்படி கழிவு தேயிலையினை அருந் துவதால் சிறுநீரக பாதிப்பு மற்றும் பல் வேறு நோய்களால் மக்கள் பாதிக்கப்படுவதாக அதிகாரி கள் சுட்டிக்காட்டு கின்றனர்.

உள்நாட்டு மக்கள் பாதிக் கப்படுவதோடு, வெளிநாடுகளி லும் சிலோன் டீ என்ற நாமத் திற்கு அவப்பெயர் ஏற்பட்டுள் ளது. எனவே, இப்படியான நடவடிக்கைகளை தடுப்பதற்கு காத்திரமான நடவடிக்கை அவசியம் எனவும் வலியுறுத்தி யுள்ளனர். (அ)

## விளையாட்டுத் திறமை கொண்ட பிள்ளைகளை அடையாளம் காணும் பொறுப்பு ஆசிரியர்களிடம்!

கொழும்பு, ஜூன் 18

விளையாட்டுத் திறமை கொண்ட பிள்ளைகளை அடை யாளம் காணும் முதல் பொறுப்பு பாடசாலை ஆசிரியர்களிடமே உள்ளதாக கல்வி மற்றும் உயர் கல்வி பிரதியமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

தியகம பகுதியில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந் துக் கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்-பிள்ளைகளின் உடல் மற்றும் மன ஆரோக்கி யத்தைப் பேணுவதற்கு விளை யாட்டு மற்றும் உடற்கல்வி அவசியம். ஒரு அரசாங்கமாக, பாடசாலை விளையாட்டுகளை மேம்படுத்துவதற்கு நாங்கள் நிதி ஒதுக்கியுள்ளோம்.

விளையாட்டுப் பாடசாலை கள் தொடர்பான மீளாய்வு களை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

விளையாட்டு என் பது வெற்றி மற்றும் தோல்வி இரண்டையும் கற்பிக்கும் ஒரு வழிமுறையாகும். விளையாட் டிலிருந்து வரும் ஆற்றல் பாடசாலைக் கல்வியில் மிக முக்கியமானதாகும்.

சிறந்த விளையாட்டு வீரர் களை உருவாக்க வேண்டிய பொறுப்பும் பாடசாலை ளுக்கு உள்ளது. அவ்வாறான வர்களை சர்வதேசம் வரை கொண்டு செல்ல வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பா கும். இதற்காக கல்வியையும் விளையாட்டையும் ஒன்றி ணைப்பது தொடர்பிலான கலந்துரையாடல்களை நடத்தி வருகிறோம்-என்றார். (அ)

## இஸ்ரேலுக்கு இலங்கையர்களை அனுப்புவது தற்காலிக நிறுத்தம்

கொழும்பு, ஜூன் 18

மத்திய கிழக்கில் தற்போதை நிலைமையை கருத்திற்கொண்டு இஸ்ரேலுக்கு இலங்கையர் களை அனுப்புவதை தற்கா லிகமாக நிறுத்தி இருக்கிறோம். எதிர்வரும் நாட்களில் நிலை மையை கருத்திற்கொண்டு அதுதொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும். அதே நேரம் இஸ்ரேல் மற்றும் ஈரா னில் இருக்கும் இலங்கையர்கள் எந்த சந்தர்ப்பத்திலும் அங் குள்ள எமது தூதரகங்களுடன் தொடர்புகொள்ள முடியும் என வெளிவிவகார மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச் சந்திர தெரிவித்தார்.

வெளிவிவகார பிரதி அமைச் சில் இடம்பெற்ற விசேட செய் தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கை யிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கை யில்-மத்திய கிழக் கில் இஸ் ரேல் மற்றும் ஈரான் நாடுகளுக் கிடையில் மோதல் நிலை ஏற் பட்டுள்ளது. இலங்கையை பொறுத்தவரை, இஸ் ரேலில் 20ஆயிரத்துக்கும் மேற் பட்ட இலங்கையர்கள் தற் போது அங்கு தொழில் செய்து வரு கின்றனர். அதேபோன்று ஈரா னில் 20 பேர் வரை இருப் பதா கவே தெரிவிக்கப்பட்டிருக் கிறது.

எவ்வாறு இருந்தாலும் கடந்த தினங்களாக இந்த இரண்டு நாடு களுக்கிடை லுமான மோதல் தீவிரமடைந்துள் ளதால், அந்த வலயத்தில் விமான சேவைகள் இரதுச்செய்து, அமைதியற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

அதனால் வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு இது தொடர் பாக தலையீடுகளை மேற் கொண்டு ஒரு சில வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். குறிப்பாக தெஹ்ரான் மற்றும் டெல் அவிவில் இருக் கும் எமது தூதரகங்களுடன் நாங்கள் நேரடியாக தொடர் புகளை ஏற்படுத்திக்கொண்டு அங்கு இடம்பெறும் விடயங் கள் தொடர்பில் கேட்டறிந்து வருகிறோம்.-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி வழிகாட்டல்களை அப்பட்டமாக மீறியுள்ளது அரசு!

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



**கொழும்பு ஜூன் 18**

**அரசாங்கம் உள்ளூராட்சி மன்ற வழிகாட்டுதல்களை அப்பட்டமாக மீறியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

விசேட கூற்றொன்றை முன்வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்றமொன்றில் ஒட்டுமொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 50 சதவீத்திற்கும் அதிகமான உறுப்பினர்களை எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது சுயேச்சைக் குழுவோ பெறாத சந்தர்ப்பங்களில், தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தேர்ந்தெடுப்பதற்கான தெளிவான வழிகாட்டுதல்கள் மற்றும் அளவுகோல்களை உள்ளூராட்சி அமைச்சு வெளியிட்டுள்ளது.

குறிப்பாக இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றி நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இந்தப் பணி சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டபோது, ஐக்கிய மக்கள் சக்தியும் எதிர்க்கட்சியும் பல சபைகளில் அதிகாரத்தைப் பெற்றன.

இதை அவதானித்த, தற்போதைய அரசாங்கம் அழுத்தம் கொடுத்து, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை மாற்றி செயல்பட நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த வழிகாட்டுதல்களின் பக்கம் 7 இல் இரகசிய வாக்கெடுப்பு அல்லது பகிரங்க வாக்கெடுப்பு நடத்துவது குறித்து கருத்துகளை கோருவது எங்கனம் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கு ஒவ்வொரு உறுப்பினரினதும் பெயரையும் அழைத்து எவ்வாறு கேட்பது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க ஐக்கிய மக்கள் சக்தியும் எதிர்க்கட்சியும் இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றி செயல்படுவதன் ஊடாக சபைகளில் அதிகாரங்களை கைப்பற்றியதன் காரணமாக, தன்னிச்சையாக இந்த வழிகாட்டுதல்களை மாற்றுவதற்கு ஒவ்வொரு பகுதிக்கும் பொறுப்பான அதிகாரிகளும் உள்ளூராட்சி ஆணையாளர்களும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கொழும்பு மாநகர சபையின் 60 உறுப்பினர்கள் கையெழுத்திட்டு பகிரங்க வாக்கெடுப்பைக் கோரும்போது, அந்தக் கோரிக்கை எவ்வாறு புறக்கணிக்கப்பட்டது என்ற விடயத்தில் பிரச்னை காணப்படுகிறது.

இந்த வழிகாட்டுதல்களை மாற்றி தமக்கு ஏற்றாற் போல் நடந்து கொள்வதற்கும், திட்டத்தை செயல்படுத்துவதற்கும் செல்வாக்கு செலுத்திய தரப்பினர் யார் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.

சில நாட்களுக்கு முன்பு இது குறித்து வினவப்பட்ட போது கூட, இந்த வழிகாட்டுதல்களைப் பரிசீலிப்பதாக தெரிவித்திருந்தனர்.

இந்த வழிகாட்டுதல்களை அப்பட்டமாக மீறி கொழும்பு மாநகர சபை உட்பட ஏராளமான உள்ளூராட்சி நிறுவனங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

இது ஜனநாயகத்திற்கு விழுந்த பெரும் அடி.இந்த வழிகாட்டுதல்களிலிருந்து விலகி நடப்பதற்கு மேல் மட்டத்தில் இருந்து ஏதேனும் அழுத்தம் வந்ததா என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.

இந்த வழிகாட்டுதல்கள் இன்று பல இடங்களில் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இது ஜனநாயகத்தை மீறும் நடவடிக்கையாகும்.

ஒரு பிரதேசத்தில் பகிரங்க வாக்கெடுப்பும், மற்றொரு பிரதேசத்தில் இரகசிய வாக்கெடுப்பும் நடத்துவதன் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன.

இந்த ஜனநாயக விரோத செயலுக்கு எதிராக எடுக்கத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுப்போம்-என்றார். (அ)

# கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தில் இலங்கை - பிரான்ஸ் கையெழுத்து

கொழும்பு, ஜூன் 18

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு செயல்முறை தொடர்பாக இலங்கைக்கும் பிரான்சுக்கும் இடையிலான இருதரப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இது வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும் என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான உத்தியோகபூர்வ கையொப்பமிடும் விழா நேற்று முன் தினம் கொழும்பில் நடைபெற்றதாக நிதி அமைச்சு உறுதிப்படுத்தியது.

இருதரப்பு ஒப்பந்தத்தில் அரசாங்கத்தின் சார்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சகத்தின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவும், பிராண்ஸ் அரசாங்கத்தின் சார்பாக கருவூலத்தின் இயக்குநரகத்தின் பலதரப்பு விவகாரங்கள், வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக் கொள்கைகள் துறையின் உதவிச் செயலாளர் வில்லியம் ரூஸ/ம் கையெழுத்திட்டனர்.

கடன் நிலைத்தன்மையை மீட்டெடுக்கவும், அதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும் கடன் மறுசீரமைப்பு செயல்முறையை விரைவில் முடிப்பதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டுக்கு இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது ஒரு சான்றாகும் என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜப்பான் மற்றும் இந்தியாவுடன் இணைந்து அதிகாரபூர்வ கடன் வழங்குநர் குழுவிற்கு தலைமை தாங்கி, இலங்கையின் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு செயல்முறையை முன்னெடுப்பதில் பிரான்ஸ் அரசாங்கம் முக்கிய பங்கு வகித்ததாக நிதி அமைச்சகத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார மீட்சியின் சவால்களை இலங்கை சமாளிக்க உதவுவதில் பிரெஞ்சு அரசாங்கத்தின் தலைமைத்துவம், அர்ப்பணிப்பு மற்றும் ஆக்கபூர்வமான ஈடுபாடு ஆகியவை முக்கிய பங்கு வகித்துள்ளன.

மேலும் ஒத்துழைப்பு மனப்பான்மை கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதில் இலங்கை அர்த்தமுள்ள முன்னேற்றத்தை அடைய உதவியது என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.குறிப்புகள் பரிமாற்றம் மற் றும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது பிராண்ஸ் மற்றும் இலங்கை இடையேயான ஆழமான மற் றும் நீண்டகால இருதரப்பு உற வுகளை மேலும் வளர்ப்பதற்கு வழி வகுக்கும் என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப் பட்டுள்ளது.

# பஸ்களில் பயணச்சீட்டினை கட்டாயமாக்க அரசு திட்டம்!

கொழும்பு, ஜூன் 18

பஸ்களில் பயணிக்கும் பயணிகளுக்கு பயணச்சீட்டு வழங்குவது கட்டாயமாக்கப்படும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ் களை இயக்குவதற்கான கூட்டு வேலைத் திட்டத்தை செயல்படுத்தவும் திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளதாகவும்அமைச்சர்சுட்டிக்காட்டினார்.

கொழும்பு மத்திய பஸ் நிலையத்தின் ஆய்வுப் பயணத்தில் பங்கேற்ற பின்னர் ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

இம் மாதம் 30 ஆம் திகதி முதல் வாகன செயல்பாட்டில் 85 பாதுகாப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் அவர் இதன் போது குறிப்பிட்டார். (அ)

# நாடு திரும்ப விரும்பும் இலங்கையருக்கு மீள் வருகை வீஸா பெறுவதற்கு உதவி

## இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரகம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 18

இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகம், நாட்டிற்குள் நுழைய விரும்பும் இலங்கையர்களுக்கு மீள் வருகை விசாக்களைப் பெறுவதில் உதவ முடிவு செய்துள்ளது.

இஸ்ரேலுக்கான சர்வதேச விமானங்கள் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால், இலங்கையர்களுக்கான மீள் வருகை விசாக்களை நீடிப்பதை எளிதாக்குவதற்கு தூதரகம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

ஈரான்-இஸ்ரேல் மோதல் தொடங்கிய நாளிலிருந்து மீள் வருகை விசாக்களின் செல்லுபடியாகும் காலத்தை இரண்டு மாதங்களுக்கு நீட்டிக்க இஸ்ரேலின் மக்கள் தொகை மற்றும் குடிவரவு ஆணையகத்துக்கு முறையான எழுத்துப்பூர்வ கோரிக்கையை சமர்ப்பித்துள்ளதாக தூதர் நிமல் பண்டார ஒரு அறிக்கையில் குறிப்பிட்டார்.

இந்த நீட்டிப்பு இலங்கை குடிமக்களுக்கு மட்டுமல்ல, பிற நாடுகளின் குடிமக்களுக்கும் பொருந்தும் என்று தூதர் கூறினார்.

இருப்பினும் இந்த செயல்முறைக்கு சிறிது நேரம் ஆகலாம்.

இஸ்ரேலுக்கு வெளியே தற்போது வசிக்கும் இலங்கையர்களின் மீள் வருகை விஸாக்



கள் காலாவதியாகி வருவதால், எகிப்தின் கெய்ரோ விமான நிலையம் வழியாக அவர்கள் வந்து சேருவதற்கான ஏற்பாடுகள் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும், பின்னர்வாடகைப்பேருந்து மூலம் ஈலாட்டுக்கு மாற்றப்படுவதாகவும் அவர் கூறினார்.

தேவைப்பட்டால், குறுகிய கால எகிப்திய விஸாக்கள் மற்றும் குழு போக்குவரத்தைப் பெறுவதற்கும் தூதர் உதவ முடியும் என்று தூதர் நிமல் பண்டார மேலும் கூறினார்.

அத்தகைய நபர்கள் தங்கள் பெயர்கள், கடவுச்சீட்டு எண்கள் மற்றும் தொடர்பு எண்களை தூதரகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று தூதர் கூறினார்.

விஸா செயலாக்கம், விமான மறு முன்பதிவு மற்றும் தரை வழி போக்குவரத்து தொடர்பான அனைத்து செலவுகளையும் சம்பந்தப்பட்ட நபர்களே ஏற்க வேண்டும் என்றும், தூதர் வசதி மற்றும் ஒருங்கிணைப்பு ஆதரவை மட்டுமே வழங்கும் என்றும் தூதர் நிமல் பண்டார குறிப்பிட்டார். (அ)

# 6 மாவட்டங்களுக்கு நிலச்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு!

கொழும்பு, ஜூன் 18

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் 6 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட முதலாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 04.00 மணி முதல் இன்று புதன் கிழமை பிற்பகல் 04.00 மணி வரை இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு - பாதுக்கை பிரதேச செயலர் பிரிவு, களுத்துறை - அகலவத்தை, வலல்லா விட்ட, பாலிந்த நுவர, புலத்சிங்கள பிரதேச செயலர் பிரிவுகள், கண்டி - மேல் கோரளை பிரதேச செயலர் பிரிவு, நுவரெலியா - அம்பகமுவ பிரதேச செயலர் பிரிவு, கேகாலை - தெரணியகல, யட்டியந்தோட்டை, தெஹியோவிட்ட பிரதேச செயலர் பிரிவுகள் இரத்தினபுரி - குருவிட்ட , எஹெலியகொடை, பெல்மடுல்ல, எலபாத்த, கலவானை, நிவித்திகல, அயகம, இரத்தினபுரி பிரதேச செயலர் பிரிவுகள். (ஐ)

# ஜயவர்தனபுர வைத்தியசாலையின் அறுவைச் சிகிச்சை நிபுணர் கைது!

கொழும்பு, ஜூன் 18

சிறி ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையைச் சேர்ந்த நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் ஒருவரும் எழுதுவினைஞர் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதிக விலைக்கு மருந்துகளை விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் இருவரும் கைது செய்யப்பட்டதாக இலஞ்ச ஒழிப்பு ஆணையகம் தெரிவித்துள்ளது.

இவர்கள் மூன்றாம் தரப்பினர் மூலம் அதிக விலைக்கு மருந்துகளை விற்றுள்ளதாக விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளதாக இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழு மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# லெபனானில் தொழில் புரியும் இலங்கையருக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 18

ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையே நிலவும் போர் சூழ்நிலை காரணமாக லெபனானில் உள்ள இலங்கையர்கள் விழிப்புடனும், எச்சரிக்கையாகவும் இருக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில்லெபனானில் உள்ள இலங்கைத் தூதரகம், இலங்கையர்களுக்கு ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.


அனைத்து தனிநபர்களும் நெரிசலான இடங்களுக்குச் செல்வது, இரவில் வெளியே செல்வது, விழாக்களில் பங்கேற்பது மற்றும் நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்வதைத் தற்காலிகமாகத் தவிர்க்குமாறு அதில் அறிவுறுத்தியுள்ளது.

மேலதிகமாக, இலங்கையர்கள் வெளியில் செல்லும்போது தங்கள் லெபனான் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டின் நகலை தங்களிடம் வைத்திருக்கவேண்டும் என்று தூதரகம் அறிவித்துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ப்பாட்டத்தை குழப்ப முயற்சி அம்பாறையில் பதற்ற நிலைமை




திருக்கோவில், ஜூன் 18

**"தமிழர் விரோத செயல்க ளுக்கும் தமிழர் தேச ஆக்கிர மிப்புகளுக்கும் எதிரான மக்கள் போராட்டம் - தமிழர்களாக உணர்வோடும் உரிமையோடும் அணிதிரள்வோம்" என்ற தொனிப்பொருளில் அம்பாறை மாவட்டம் திருக்கோவில் - தம்பிலுவில் மத்திய சந்தை முன்பாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இந்த ஆர்ப் பாட்டத்தை குழப்ப முயற்சித் ததால் பதற்ற நிலைமை ஏற்பட்டது.**

வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவினர்களால் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட் டத்தில் குழப்பம் ஏற்பட்டது டன் திருக்கோவில் பிரதேச சபை யின் தவிசாளரால் சந்தைப் பகு தியில் ஆர்ப்பாட்டம் நடத் தத் தடை என்று அறிவிக்கப் பட் டதால் பதற்ற நிலை ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற பகுதிக்கு தவிசாளரின் பெய ரைக் கூறி வருகை தந்த சிலர் மக்களை மிரட்டியதுடன் வாக் குவாதத்திலும் ஈடுபட்டனர்.

அம்பாறை மாவட்டம் திருக் கோவில் பிரதேச பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏற்பட்ட குழப்பம் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கி. ஜெயசிறில் கூறு கையில்,

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாத்திரமல்ல தமிழன் என்ற அடிப்படையில் வடக்கு - கிழக்கு பூராகவும் எங்களது இனத்துக்காகவும் கடத்தப் பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வர்களுக்கு நீதி வேண்டி போராட்டத்தில் கலந்து கொண்டு வருகின்றேன்.

திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் ஒரு துண்டுப்பிரசு ரத்தை வெளியிட்டு தம்பிலு வில் மத்திய சந்தை பகுதியில் போராட்டம் நடத்துவதற்குத் தடை ஏற்படுத்தியுள்ளார். இவ்வாறான செயல்பாடுகள் மனிதனுடைய அடிப்படை உரிமை மீறலாகும். இவ்வா றான விடயங்களை தவிசாளர் என்பவர் செய்யக் கூடாது. அவ் வாறான அதிகாரம் தவிசாள ருக்கு இல்லை என்பதை இவ் விடத்தில் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

நானும் முன்னாள் தவிசாளர் என்ற முறையில் எனக்குத் தெரிந்த விடயத்தில் இவ்விட யத்தை தெரிவிக்க விரும்பு கின்றேன். ஏனெனில் எமது வடக்கு - கிழக்கு தமிழர்களின் பாதுகாப்புக்காக இவ்வாறான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதனடிப்படை யில் இன்று (நேற்று முன்தினம்) போராட்டம் நடைபெற்ற போது சிலர் மதுபோதையில் தவிசாளரின் இணைப்பாளர் எனக் கூறிக்கொண்டு "நீங்கள் இங்கு போராட்டத்தில் ஈடுபட முடியாது. காரைதீவிலிருந்து நீங்கள் இவ்விடத்துக்கு வர முடியாது"என்று கூறினர்.

நான் தமிழன் என்ற ரீதியில் எங்கு சென்றும் குரல் கொடுப் பேன். கடந்த ஆட்சிக் காலத் தில் ஒட்டுக் குழுக்களின் பின் னணியிலிருந்து இந்த இடத்தில் பல தடவை நான் அச்சுறுத் தப்பட்டேன். ஒரு தடவை கடத்தப்படவும் இருந்தேன். இன்று என்னை மதுபோதை யில் வந்து தாக்க முற்பட்டு காரைதீவு பகுதியிலிருந்து திருக் கோவில் பகுதிக்கு எவ்வாறு வருவீர்கள் என்றும் உங்களுக்கு இடுப்பில் பலம் இருக்கின்றதா என்று என்னிடம் கேட்கின் றார்கள்.நிச்சயமாக எனது இடுப்பில் பலம் இருக்கின் றது.- என்றார். (எ)

# கிண்ணியா நகர சபையின் தவிசாளராக மஹ்தி தெரிவு



கிண்ணியா, ஜூன் 18

திருகோணமலை, கிண் ணியா நகர சபையின் தவிசாளர் தெரிவு நேற்று நகர சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையா ளர்எம். அஸ்மி தலை மையில் இந்த தவிசாளர் தெரிவு நடைபெற்றது.

இதில், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் எம். மஹ்தி தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

பகிரங்க வாக்கெடுப்பு மூலம் தவிசாளர் தெரிவு செய்யப்பட்ட துடன் உப தவிசாளராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உறுப்பி னர் அப்துல் அஸீஸ் தெரிவு செய்யப்பட்டார். (எ)

# இன்னும் 2 தினங்களில் காட்டுப்பாதை திறப்பு

காரைதீவு, ஜூன் 18

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகன் ஆலய வரு டாந்த ஆடிவேல் விழா உற்ச வத்துக்காக காட்டு வழிப்பாதை இன்னும் 02 தினங்களில் அதா வது நாளை மறுதினம் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதி காலை 05.30 மணியளவில் திறக்கப்படும்.

காட்டுப் பாதை திறப்பதற்கு இன்னும் 02 தினங்கள் இருக்கை யில் இப் பாதை பயணிப்பதற்கு உகந்ததாக காட்சியளிக்கிறது என அங்கு நேரடியாக சென்று வந்த சித்தர்கள் குரல் அமைப் பின் ஸ்தாபகர் சிவசங்கர் ஜீ தெரிவித்தார். (எ-08)

# தென்கிழக்குப் பல்கலையில் 8ஆவது சர்வதேச ஆய்வு மாநாடு



ஒலுவில், ஜூன் 18

இந்தியாவின் தமிழ்நாடு சேலத்திலுள்ள பெரியார் அரசு பல்கலைக்கழகத்தின் முகாமைத் துவ கற்கைகள் திணைக்களமும் இலங்கை தென்கிழக்குப் பல்க லைக்கழகத்தின் முகாமைத்துவ வர்த்தக பீடமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த 8 ஆவது சர்வதேச ஆய்வு மாநாடு, தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வர்த்தக பீடத் தின் பீடாதிபதி எம். முஸ்தபா வின் நெறிப்படுத்தலில் பல்க லைக்கழக தொழில்நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் திங்கட்கி ழமை நடைபெற்றது.(எ-01)

# சம்மாந்துறையில் கணக்காய்வு கூட்டம்

சம்மாந்துறை, ஜூன் 18

இரண்டாவது காலாண்டுக் கான கணக்காய்வு முகாமைத் துவ குழுக் கூட்டம் சம்மாந் துறை வலயக்கல்வி அலுவல கத்தில் வலயக் கல்விப் பணிப் பாளர் எஸ். மகேந்திரகுமார் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு அம்பாறை மாவட்ட தேசிய கணக்காய்வு அத்தியட்சகர் எவ். நிஸார்டீன் மற்றும் கிழக்கு மாகாணக் கணக்காய்வு உத்தியோகத்தர் எம். ஜெமீல் ஆகியோர் கலந்து கொண்டு பாடசாலைகளில் அவதானிக் கப்படும் ஜயவினா தொடர் பான சந்தேகங்களுக்கான விளக் கங்கள் வழங்கினர். (எ-08)

# சத்தியப்பிரமாணம்




காரைதீவு, ஜூன் 18

தேசிய மக்கள் சக்தியின் சார் பில் அம்பாறை மாவட்ட கரை யோரப் பிரதேசங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதிய உறுப்பினர்களுக்கான சத்தியப் பிரமாண நிகழ்வு நேற்று முன்தி னம் திங்கட்கிழமை அக்கரைப் பற்று மாநகர சபை ஹல்லாஜ் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பாராளு மன்ற உறுப்பினர்களான அபூ பக்கர் ஆதம்பாவா மற்றும் மஞ் சுல ரட்நாயக்க ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதன்போது அக்கரைப் பற்று, அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில், இறக்காமம், நிந்த வூர், காரைதீவு, சம்மாந்துறை ஆகிய உள்ளூராட்சி மன்றங் களுக்குத் தெரிவு செய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் சகல உறுப்பினர்களும் கலந்து கொண்டு சத்தியப்பிரமாணம் செய்தனர். (எ)

# ஓட்டமாவடி பிரதேச சபை முஸ்லிம் காங்கிரஸ் வசம்

மட்டக்களப்பு, ஜூன் 18

மட்டக்களப்பு, ஓட்டமா வடி பிரதேச சபை முஸ்லிம் காங்கிரஸ் வசமானது.

நடந்து முடிந்த உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலில் ஓட்ட மாவடி பிரதேச சபையில் வெற்றி பெற்ற உறுப்பினர்களில் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும் பான்மை பெறவில்லை. இந்த சபைக்கான தவிசாளர், உப தவி சாளரை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு உள்ளூராட்சி ஆணையாளர் எம். அஸ்மி தலைமையில் நேற்று முன்தி னம் திங்கட்கிழமை நடை பெற்றது.

தவிசாளர் தெரிவின்போது சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்மொழிந்த எச். முஹம்மது பைறூஸ், 09 வாக்குகளை பெற்று தவிசாளராக தெரிவு செய்யப்பட்டதோடு உப தவிசாளராக எச். நுபைல் தெரிவு செய்யப்பட்டார். (எ)

# அம்பாறையில் யானை தாக்கி பொலிஸ் உத்தியோகத்தர் பலி

காரைதீவு, ஜூன் 18

அம்பாறை, தெஹியத்தகண் டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வலஸ்கல வனப்பகுதியில் காட்டு யானை தாக்கி பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்ததாக தெஹியத்த கண்டிய பொலிஸார் தெரிவித் தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

உயிரிழந்தவர் தெஹியத்த கண்டிய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலநறுவை அரலகங்வில பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஆவார்.

இவர் கடமைக்கு செல்வதற் காக மோட்டார் சைக்கிளில் தெஹியத்தகண்டிய பொலிஸ் நிலையத்தை நோக்கி சென்று கொண்டிருக்கும் போது காட்டு யானை தாக்கி படுகாயமடைந் தார்.

படுகாயமடைந்தவர் பிரதே சவாசிகளின் உதவியுடன் தெஹியத்தகண்டிய மருத்து வமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலி ஸார் மேலும் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் மண்ணில் வரலாற்றில் மிகப்பெரும் தாக்குதலுக்கு தயார்

## அறிவித்தது ஈரான்
## ஈரானில் 224 பேரும் இஸ்ரேலில் 24 பேர் பலி

டெல் அவிவ், ஜூன் 18

**இஸ்ரேல் மண்ணில் வரலாற்றில் மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்படும் என்று ஈரான் எச்சரித்துள்ளது. இதேவேளை, ஈரானுக்கு எதிராக வெற்றிப்பாதையில் இருப்பதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.**

தங்களுக்கு எதிராக அணு ஆயுதங்களை தயாரிப்பதாக கூறி ஈரான் மீது கடந்த 13ஆம் திகதி திடீரென இஸ்ரேல் தாக்குதல் தொடுத்தது. தலைநகர் தெஹ்ரான் மற்றும் அதைச் சுற்றியுள்ள இராணுவ நிலைகள் மற்றும் முக்கியமான அணு ஆயுத கட்டமைப்புகளை குறி வைத்து போர் விமானங்கள் மூலம் குண்டு வீசியது.

இஸ்ரேலின் இந்த பயங்கரத் தாக்குதலில் ஈரானின் இராணுவத் தளபதிகள், அணு ஆயுத விஞ்ஞானிகள் என பாதுகாப்பு நிபுணர்கள் பலர் கொல்லப்பட்டனர். அத்துடன் வான் பாதுகாப்பு அமைப்பு மற்றும் இராணுவ தளவாடங்களும் மிகப் பெரும் சேதமடைந்தன. மேலும், தெஹ்ரானில் உள்ள இயற்கை எரிவாயு சுத்திகரிப்பு ஆலை மற்றும் எண்ணெய்க் கிடங்கையும் தாக்கியது. இந்த எண்ணெய்க் கிடங்கு தொடர்ந்து பற்றி எரிகிறது. இதனால், ஈரானில் பரவலாக பெருத்த சேதம் விளைந்துள்ளது.

இதற்கிடையே இஸ்ரேல் மீது ஈரானும் பதிலடி தாக்குதலை தொடங்கியது. ஜெருசலேம், டெல் அவிவ் உள்ளிட்ட இஸ்ரேலின் முக்கிய நகரங்களை குறி வைத்து ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை கொண்டு தாக்கி வருகிறது.

இதில் பலவற்றை இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அமைப்பு இடைமறித்து தாக்கி அழித்த நிலையில், அதையும் தாண்டி சில ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் தங்கள் இலக்கை தாக்கின.

இரு நாடுகளுக்கும் இடையேயான இந்த மோதல் நேற்று 5ஆவது நாளாக நீடித்தது. இஸ்ரேலின் போர் விமானங்கள் ஈரானுக்குள் நூற்றுக்கணக்கான கிலோ மீற்றர் தூரத்துக்கு உள்ளே சென்று தாக்குதலை நடத்தி வருகின்றன.

குறிப்பாக ஈரானின் மேற்கு பகுதியில் இருந்து தலைநகர் தெஹ்ரான் வரை ஈரானின் வான் பகுதியை தங்கள் போர் விமானங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும் எந்தவித தடையும் இன்றி தாக்குதல் தொடுத்து வருவதாகவும் இஸ்ரேல் கூறியது.

இந்தத் தாக்குதலில் ஈரானின் 120 ஏவுகணை லோஞ்சர்கள் அழிக்கப்பட்டதாகவும் அவற்றின் மூலம்தான் கடந்த 4 நாட்களாக இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாகவும் இஸ்ரேல் இராணுவ செய்தி தொடர்பாளர் எப்பி டெப்ரின் கூறியுள்ளார். மேலும், தெஹ்ரானில் உள்ள ஈரான் புரட்சிகர படையின் 10 கட்டளை மையங்கள் அழிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

இது குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறுகையில், "தெஹ்ரான் வான் பகுதியை எங்கள் விமானப்படை கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. அணு ஆயுத அச்சுறுத்தலை நீக்குதல் மற்றும் ஏவுகணை அச்சுறுத்தலை நீக்குதல் ஆகிய இரண்டு குறிக்கோள்களை அடைவதற்கான பாதையில் நாங்கள் இருக்கிறோம்" என கூறினார்.

மேலும் அவர், "நாங்கள் வெற்றியின் பாதையில் இருக்கிறோம். அந்த இலக்கு எட்டப்படுகிறது. அற்புதமான பணிகளைச் செய்யும் எங்கள் வீர விமானிகள் மற்றும் எங்கள் அற்புதமான தரைப்படை குழுவினருக்கு நன்றி" என்றும் தெரிவித்தார்.

**அதிகரிக்கும் உயிரிழப்பு**

ஈரானில் கடந்த 13ஆம் திகதி முதல் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் 224 பேர் உயிரிழந்ததாகவும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்ததாகவும் அதிகாரபூர்வ தகவல் வெளியானது. இதேநேரம் பலி எண்ணிக்கை 400இற்கு மேல் உயர்ந்திருப்பதாகவும் 600இற்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் மனித உரிமை ஆர்வலர்கள் ஏற்கனவே கூறியிருந்தனர்.

மறுபுறம் இஸ்ரேல் மீது நேற்றும் ஈரான் அலையலையாக ட்ரோன்களையும் 100இற்கு மேற்பட்ட ஏவுகணைகளையும் வீசியது. இதில் பெரும்பாலும் அடுக்குமாடி கட்டடங்கள் சேதமடைந்தன. இதில், 8 பேர் பலியாகினர். டெல் அவிவ் நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அருகே ஈரானின் ஏவுகணை ஒன்று விழுந்து வெடித்தது.

இஸ்ரேல் மீது ஈரான் நடத்தி வரும் பதில் தாக்குதலில் இதுவரை 24 பேர் உயிரிழந்ததாகவும் 500இற்கு அதிகமானோர் காயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் மீது நேற்று தீவிர தாக்குதல் நடத்தியுள்ள நிலையில், முந்தையவற்றை விட மிகவும் வலிமையானது - கடுமையானது- துல்லியமானது மற்றும் அழிவுகரமானதாக இருந்ததாக ஈரான் கூறியுள்ளது. மறுபுறம் ஈரான் தலைநகர் தெஹ்ரானில் வசித்து வரும் மக்களை வெளியேறுமாறு இஸ்ரேல் இராணுவம் எச்சரித்துள்ளது. இதன் மூலம் அங்கே தீவிர தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது.

இந்த நிலையில், இஸ்ரேல் மண்ணில் வரலாற்றில் மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்படும் என்று ஈரான் அறிவித்துள்ளது. இஸ்ரேலை நோக்கி புதிய ஏவுகணை தாக்குதல்கள் நடத்தவுள்ளதாக ஈரான் அரசு ஊடகங்கள் அறிவித்துள்ளன.

மேலும், இஸ்ரேல் மண்ணில் வரலாற்றில் மிகப்பெரிய மற்றும் மிகவும் தீவிரமான ஏவுகணைத் தாக்குதலுக்கு ஈரான் தயாராகி வருவதாகவும் ஈரான் அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

# பாதாள அறையில் தஞ்சமடைந்த ஈரான் மதத்தலைவர் அலி கமெனி



தெஹ்ரான், ஜூன் 18

இஸ்ரேல் இராணுவத்தின் தாக்குதல் தீவிரமடைந்துள்ள நிலையில் ஈரான் உச்ச மதத் தலைவர் ஐயத்துல்லா அலி கமெனி குடும்பத்துடன் பாதாள அறையில் தஞ்சமடைந்துள்ளார்.

தற்போதைய ஷியா மதத் தலைவர் ஐயத்துல்லா அலி கமெனியே ஈரானை திரைமறைவில் ஆட்சி செய்து வருகிறார். அவரை அகற்றிவிட்டு, ஈரானில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த இஸ்ரேல் வியூகம் வகுத்துள்ளது.

பலஸ்தீனத்தின் காஸா பகுதியைச் சேர்ந்த ஹமாஸ் அமைப்பினர், லெபனானை சேர்ந்த ஹிஸ்புல்லா அமைப்பினர், ஏமனை சேர்ந்த ஹவுதி அமைப்பினர்களுக்கு ஈரான் ஆதரவு அளித்து வருகிறது. ஈரானில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் இந்த 3 அமைப்புகளும் வலுவிழந்துவிடும். எனவே, ஈரானுக்கு எதிரான போரை இஸ்ரேல் இராணுவம் தீவிரப்படுத்தி வருகிறது- இவ்வாறு சர்வதேச பாதுகாப்பு நிபுணர்கள் தெரிவித்தனர். (எ)

# இஸ்ரேல் மீது பாகிஸ்தான் அணுகுண்டு வீசி தாக்கும்

## ஈரான் எச்சரிக்கைக்கு பாக். மறுப்பு

தெஹ்ரான், ஜூன் 18

ஈரான் மீது இஸ்ரேல் அணுகுண்டு வீசினால் இஸ்ரேல் மீது பாகிஸ்தான் அணுகுண்டு வீசும் என்று ஈரான் இராணுவ அதிகாரி தெரிவித்தார். அப்படி எந்த உறுதியும் அளிக்கவில்லை என்று பாகிஸ்தான் அரசு உடனடியாக இதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது.

'ஈரானின் அணுசக்தி திட்டம் ஆபத்தானது. அது இஸ்ரேலுக்கு மட்டுமன்றி உலக நாடுகளுக்கும் அச்சுறுத்தலானது' என்று கூறி, ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. பதிலுக்கு ஈரானும் இஸ்ரேல் மீது கடும் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில், ஈரான் இஸ்லாமிய புரட்சி படை மூத்த அதிகாரியும், ஈரான் தேசிய பாதுகாப்பு கவுன்சில் உறுப்பினருமான ஜெனரல் மோசென் ரீஸி, ஈரான் அரசு தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணலில் கூறியதாவது: எங்களுக்கு எதிராக இஸ்ரேல் அணுகுண்டு வீசி தாக்குதல் நடத்தினால், பதிலடியாக இஸ்ரேல் மீது பாகிஸ்தான் அணுகுண்டு வீசும். ஈரானுக்கு ஆதரவாக இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவோம் என்று பாகிஸ்தான் எங்களுக்கு உறுதி அளித்துள்ளது. ஈரானுக்கு பக்கபலமாக இருப்போம். முஸ்லிம் நாடுகள் அனைத்தும் ஒன்றுசேர வேண்டும் என்று பாகிஸ்தான் வலியுறுத்தி வருகிறது. ஈரானிடம் இரகசிய வலிமையுள்ளது. அதை இன்னும் உலகத்துக்கு வெளிப்படுத்தவில்லை- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், ஈரான் இராணுவ அதிகாரியின் கருத்தை பாகிஸ்தான் உடனடியாக மறுத்துள்ளது. இதுகுறித்து பாகிஸ்தான் இராணுவ அமைச்சர் கவாஜா முகமது ஆசிப், தனது எக்ஸ் வலைத்தள பக்கத்தில் வெளியிட்ட பதிவில் கூறியுள்ளதாவது: ஈரான் அதிகாரி கூறுவதுபோல பாகிஸ்தான் எந்தவொரு வாக்குறுதியும் அளிக்கவில்லை. தவிர, சர்வதேச அளவில் அணுசக்தி ஒப்பந்தங்களை பாகிஸ்தான் முறையாக கடைப்பிடித்து வருகிறது. அணு ஆயுத கட்டுப்பாடுகள் தொடர்பான சர்வதேச ஒப்பந்தங்களில் நாங்கள் கையெழுத்திட்டுள்ளோம். பாகிஸ்தானின் மண்ணையும், மக்களையும் பாதுகாப்பதற்கும், எதிரிகளின் அச்சுறுத்தலில் இருந்து எங்களை காத்துக் கொள்ளவுமே அணு ஆயுதங்கள் வைத்திருக்கிறோம்.- என்றார். (எ)

# இஸ்ரேலுடனான போரில் ஈரான் வெற்றிபெறாது

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உறுதி

ஒட்டாவா, ஜூன் 18

இஸ்ரேல் உடனான போரில் ஈரான் வெற்றிபெறாது என்று ஜி -7 உச்சி மாநாட்டில் பங்கேற்ற அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஜி-7 உச்சி மாநாடு 2025 கனடாவில் நடைபெறுகிறது. இதில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். ட்ரம்ப் இஸ்ரேல் நாட்டுக்கு தனது ஆதரவை தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களை சந்தித்த



அவர், "இந்தப் போரில் ஈரான் வெற்றி பெறாது என்று நான் உறுதியாக கூறுகிறேன். அவர்கள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். மிகவும் தாமதமாகி விடும் முன்பாக உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்" என்று தெரிவித்தார். (எ)

### உக்ரைனுக்கு எதிரான போர்:

# ரஷ்யாவுக்கு உதவிய 6, 000 வடகொரிய படையினர் பலி

மொஸ்கோ, ஜூன் 18

உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவுக்கு உதவிய 6 ஆயிரம் வடகொரிய படையினர் பலியாகினர்.

நேட்டோ கூட்டணியில் இணைய முயன்ற உக்ரைன் மீது 2022ஆம் ஆண்டு ரஷ்யா போர் தொடுத்தது. கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதில், உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆயுதம் மற்றும் பொருளாதார உதவிகளை வழங்குகின்றன. அவற்றின் உதவியால் உக்ரைன் இன்னும் [illegible]பிடித்து நிற்கிறது.

இதற்கிடையே ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியத்தில் உக்ரைனின் படைகள் நுழைந்தன. இதனால், எல்லையோர பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். பின்னர் ரஷ்யா இராணுவம் அங்கு தனது படையை குவித்தது. உக்ரைன் படைகள் தொடர்ந்து ஊடுருவியதால் நிலைமையை சமாளிக்க நட்பு நாடான வடகொரியாவின் உதவியை ரஷ்யா நாடியது.

இதனையடுத்து ரஷ்யாவுக்கு சுமார் 11 ஆயிரம் படையினரை வடகொரியா அனுப்பியதாக தென்கொரியா குற்றஞ்சாட்டியது. முதலில் அதனை மறுத்து வந்த வடகொரியா பின்னர் படையினரை அனுப்பியதை ஒப்புக்கொண்டது. உக்ரைனின் தாக்குதலை சமாளிக்க குர்ஸ்க் பிராந்திய எல்லையில் அவர்கள் நிறுத்தப்பட்டனர்.

ஆனால், அங்கு நிலவிய மோசமான வானிலை மற்றும் தாக்குதலை அவர்களால் சமாளிக்க முடியவில்லை எனக் கூறப்படுகிறது. எனவே, உக்ரைனின் தாக்குதலில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வடகொரியா படையினர் பலியானதாக இங்கிலாந்து உளவுத்துறை அறிக்கை தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிரான டெஸ்ட்: பங்களாதேஷ் சிறப்பான ஆரம்பம்




காலி, ஜூன் 18

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பமானது. இதில், முதலில் துடுப்பெடுத்தாடி வரும் பங்களாதேஷ் அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 131 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. அந்த அணி 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் இலங்கையுடன் விளையாடவுள்ளது. இந்தத் தொடரில் முதலில் டெஸ்ட் போட்டிகளும் அதனைத் தொடர்ந்து ஒருநாள் மற்றும் ரி - 20 போட்டிகளும் நடைபெறவுள்ளன. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி நேற்றுத் தொடங்கியது.

இந்தத் தொடர் 2025 - 2027 உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கு உட்பட்ட தொடராகும். (எ)

# ரி - 20 வரலாற்றில் முதல் முறை ஒரு போட்டியில் 3 சுப்பர் ஓவர்




கிளாஸ்கோ, ஜூன் 18

ரி - 20 வரலாற்றில் முதல் முறையாக ஒரே ஆட்டத்தில் 3 சுப்பர் ஓவர்கள் வீசப்பட்டன.

ரி - 20 கிரிக்கெட் போட்டி சமனில் முடிந்தால் சுப்பர் ஓவர் நடத்தப்பட்டு முடிவு அறிவிக்கப்படும். எப்போதாவது ஒருமுறை தான் சுப்பர் ஓவர் வரை ஆட்டம் வரும். ஆனால், நெதர்லாந்து மற்றும் நேபாளம் அணிகள் மோதிய ரி - 20 போட்டியில் ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று சுப்பர் ஓவர்கள் வீசப்பட்டுள்ளன. ரி - 20 வரலாற்றில் முதல் முறையாக 3 சுப்பர் ஓவர்கள் வீசப்பட்ட போட்டியாக இப்போட்டி அமைந்தது.

நெதர்லாந்து மற்றும் நேபாளம் அணிகள் மோதிய ரி - 20 போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற நேபாளம் அணி முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தது. இதன்படி, துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி 7 விக்கெட்கள் இழப்புக்கு 152 ஓட்டங்களை அடித்தது. இதனையடுத்து 153 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நேபாளம் அணி 8 விக்கெட்கள் இழப்புக்கு 152 ஓட்டங்களை அடித்தது. ஆட்டம் சமனில் முடிந்ததால் சுப்பர் ஓவர் நடத்தப்பட்டது.

முதல் சுப்பர் ஓவரில் 2 அணிகளும் தலா 19 ஓட்டங்கள் அடிக்க இரண்டாவது சுப்பர் ஓவர் நடத்தப்பட்டது. அந்த சுப்பர் ஓவரில் இரு அணிகளும் 17 ஓட்டங்களை அடித்தன. இதனால் 3 ஆவது சுப்பர் ஓவருக்கு ஆட்டம் நகர்ந்தது. இதில் நேபாளம் அணி முதல் 4 பந்துகளை சந்தித்து ஓட்டம் எதுவும் எடுக்காமல் 2 விக்கெட்களை பறிகொடுத்தது. பின்னர் களமிறங்கிய நெதர்லாந்து அணி முதல் பந்திலேயே சிக்ஸ் அடித்து வெற்றி பெற்றது. (எ)

# சோபி டிவைன் ஓய்வு



வெலிங்டன், ஜூன் 18

சர்வதேச ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக நியூசிலாந்து வீராங்கனை சோபி டிவைன் அறிவித்துள்ளார்.

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னணி வீராங்கனை சோபி டிவைன். இவர் நியூசிலாந்து அணிக்காக 151 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 3990 ஓட்டங்களும், 107 விக்கெட்களும் வீழ்த்தியுள்ளார். இதேபோல், 146 ரி - 20 போட்டிகளில் விளையாடி 3432 ஓட்டங்களும், 119 விக்கெட்களும் வீழ்த்தியுள்ளார்.

நியூசிலாந்து அணிக்காக தனது 16 வயதில் அறிமுகமான சோபி டிவைன் சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். இந்த நிலையில், சோபி டிவைன் இந்தியாவில் நடைபெறவுள்ள மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணத் தொடருக்கு பின்னர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக கூறியுள்ளார்.

13ஆவது மகளிர் ஒருநாள் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறுகிறது. இந்தத் தொடரில் மொத்தம் 8 அணிகள் கலந்து கொள்கின்றன. ஓய்வு குறித்து சோபி டிவைன் கூறியதாவது,

விலகுவதற்கான சரியான நேரம் இதுவாகத்தான் இருக்கும் என நினைக்கிறேன். நியூசிலாந்து அணியில் விளையாடியதை பெருமையாக நினைக்கிறேன். அணிக்கு என்னுடைய பங்களிப்பை அளிப்பேன். ரி - 20 போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவேன்- என்றார். (எ)

# இந்தியா - நியூசிலாந்து போட்டி அட்டவணை

மும்பை, ஜூன் 18

இந்தியா - நியூசிலாந்து அணிகள் மோதும் ஒருநாள், ரி - 20 கிரிக்கெட் போட்டி தொடர் நடைபெறும் திகதிகளை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ.) அறிவித்துள்ளது.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து ரி - 20, ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ளது.

இரு அணிகளும் மொத்தம் 3 ஒருநாள் போட்டி மற்றும் 5 சர்வதேச ரி - 20 போட்டிகளில் மோதவுள்ளன. சர்வதேச ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கு முன்னதாக இந்தத் தொடர் நடைபெறுகிறது.

ஜனவரி 11ஆம் திகதி இந்தப் போட்டி தொடர் தொடங்குகிறது. முதலில் ஒருநாள் போட்டிகளும் அதைத் தொடர்ந்து ரி - 20 கிரிக்கெட் தொடரும் நடைபெறும். இந்த நிலையில், இந்தியா - நியூசிலாந்து மோதும் போட்டிகளுக்கான இடங்களை பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது.

இதன்படி பரோடா, ராஜ்கோட், இந்தூர் ஆகிய இடங்களில் ஒருநாள் போட்டிகளும், நாக்பூர், ராய்ப்பூர், குவாஹாட்டி, விசாகப்பட்டினம், திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் ரி- 20 ஆட்டங்களும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இங்கிலாந்துக்கு இந்தியா கடும் சவால் கொடுக்கும்

## மைக்கல் கிளார்க் தெரிவிப்பு

புதுடில்லி, ஜூன் 18

இங்கிலாந்துக்கு இந்திய அணி நிச்சயம் கடும் சவால் கொடுக்கும் என்று அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்தார்.

இந்திய அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் 20ஆம் திகதி ஹெடிங்லியில் தொடங்கவுள்ளது.

இதுகுறித்து அவுஸ்திரேலிய அணியின்முன்னாள் தலைவர் மைக்கல் கிளார்க் கூறியதாவது, தற்போது இங்கிலாந்து சென்றுள்ள அணியில் அனுபவம் மிகுந்த வீரர்களான விராட் கோலி, ரோஹித் சர்மா ஆகியோர் இல்லை. அவர்கள் ஓய்வு பெற்றுவிட்டனர். அணியில் இடம்பெற்றுள்ள பெரும்பாலான வீரர்கள் குறைந்த அளவு டெஸ்ட் போட்டியில் விளையாடியவர்களாகவே உள்ளனர்.

அதேநேரத்தில் பந்துவீச்சில் எதிரணியை நிலைகுலையச் செய்யும் வீரர் ஜஸ்பிரீத் பும்ரா இருக்கிறார். அவர் அங்கே எப்படி செயல்படப் போகிறார் என்பதைப் பார்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேஜர் லீக் கிரிக்கெட்

# ஹட்ரிக் வெற்றி பெற்ற டெக்சாஸ் சுப்பர் கிங்ஸ்




கலிபோர்னியா, ஜூன் 18

93 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெக்சாஸ் சுப்பர் கிங்ஸ் அணி அபார வெற்றி பெற்று மேஜர் லீக் தொடரில் ஹட்ரிக் வெற்றியைப் பதிவு செய்தது.

மேஜர் லீக் கிரிக்கெட் தொடரில் டெக்சாஸ் சுப்பர் கிங்ஸ் ஹட்ரிக் வெற்றி பெற்றது.

6 அணிகள் இடையிலான மேஜர் லீக் கிரிக்கெட் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் டெக்சாஸ் சுப்பர் கிங்ஸ் - சியாட்டில் ஆர்காஸ் அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்சாஸ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 153 ஓட்டங்கள் எடுத்தது.

தொடர்ந்து 154 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய சியாட்டில் ஆர்காஸ் அணி, சுப்பர் கிங்ஸ் அணியினரின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தனர். வெறும் 13.5 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த சியாட்டில் அணி 60 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது.

இதன் மூலம் 93 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெக்சாஸ் சுப்பர் கிங்ஸ் அணி அபார வெற்றி பெற்று இந்தத் தொடரில் ஹட்ரிக் வெற்றியை பதிவு செய்தது. (எ)

## நடவடிக்கை...

கொண்டவை - என்றும் அவர் கூறினார்.

மேலும், மன்னார் - திருக்கேதீஸ்வரம் அருகே கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் கார்பன் டேட்டிங் பரிசோதனைக்காக புளோரிடாவுக்கு அனுப்பப்படவுள்ளது என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

## பருத்தித்துறை...

தவிசாளர் தெரிவு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஜீவநந்தினி பாபு தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் வின்சன் டீபோல் டக்ளஸ் போல் 7 வாக்குகளையும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் தி. சந்திரசேகர் 4 வாக்குகளையும் பெற்றனர். இதன்படி, தவிசாளராக வின்சன் டீ போல் டக்ளஸ் தெரிவானார்.

உப தவிசாளருக்கான தெரிவிலும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தேவசிகாமணி தேவராசேந்திரன் 7 வாக்குகளை பெற்று தெரிவானார்.

இந்த வாக்கெடுப்பில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி உறுப்பினர் வெளிநடப்பு செய்தார். தேசிய மக்கள் சக்தி, சுயேச்சை உறுப்பினர் என மூவர் நடுநிலை வகித்தனர்.

15 உறுப்பினர்களை கொண்ட பருத்தித்துறை நகர சபையில் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 5 ஆசனங்களையும் இலங்கை தமிழ் அரசு கட்சி 4, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, தேசிய மக்கள் சக்தி ஆகியன தலா 2, ஈ. பி. டி. பி., சுயேச்சைக்குழு ஆகியன தலா ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மூன்று...

மாதத்துக்கும் குறைவான குழந்தைகளின் எலும்புக்கூடுகள் என்று அந்த மனித புதைகுழி அகழ்வுக்கு தலைமை தாங்கும் தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகமான அல்ஜசீராவுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எலும்புக்கூடுகளை இறுதியில் மருத்துவர்கள் பகுப்பாய்வு செய்து அவற்றுக்கு உரியவர்களின் இறப்புக்கான காரணத்தைக் கண்டறிய முயல்வார்கள் என தெரிவித்துள்ள அவர், உடல்கள் புதைக்கப்பட்ட திகதியை கண்டறிவதற்காக ஆடைகள் அல்லது செல்லோபோன் உறைகள் போன்றவற்றை பயன்படுத்தவுள்ளதாகக் கூறினார்.

மனித எலும்புக்கூடுகளுடன் பொருட்கள் எவையும் கிடைக்கவில்லை என்றால் கதிரியக்க காலமதிப்பீட்டு முறையை பயன்படுத்தப்போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மனித புதைகுழிகளின் 40 வீதத்தை மாத்திரமே இதுவரை அகழ்ந்துள்ளோம். செயற்கைகோள் படங்கள், ஆளில்லா விமான படங்கள் மூலம் இரண்டாவது மனித புதைகுழி இருப்பதற்கான சாத்தியக்கூறு ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றார்.

நான் இடைக்கால அறிக்கையொன்றை நீதிமன்றத்துக்கு வழங்கியுள்ளேன். இந்த புதைகுழிகளை பெரும் மனித புதைகுழிகள் என கருதலாம் என தெரிவித்துள்ளேன். மேலதிக விசாரணைகள் தேவை என்று தெரிவித்துள்ளேன் என ராஜ் சோமதேவ கூறினார்.

மன்னார் புதைகுழி விவகாரத்தை அரசாங்கம் கையாளும் விதம் குறித்து ஏமாற்றம் வெளியிட்டுள்ள சோமதேவ, மூன்று வருடங்களுக்கு முன்னர் நான் ஆரம்ப கோரிக்கைகளை விடுத்திருந்த போதிலும் கடந்த வாரமே உடல்களை தோண்டியவேளை மீட்கப்பட்ட பொருட்களை கையளித்தார்கள் என்று குறிப்பிட்டார்.

அவற்றை ஆராய்வதற்கான நிதியை அரசாங்கம் இன்னமும் ஒதுக்கவில்லை என்றும் அவர் கூறினார். (அ- ஐ)

## இரத்த...

மறுநாள் திங்கட்கிழமை நெடுந்தீவு பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக நேற்றைய தினம் யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி நேற்று செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

இந்த இறப்பு தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் நடத்தியதுடன், சடலத்தை உடற் கூராய்வுக்கு உட்படுத்தவும் உத்தரவிட்டார். (ஐ)

## எரிபொருள்களுக்கு...

ஈரான், இஸ்ரேல் போர் காரணமாக எரிபொருட்களுக்கு பற்றாக்குறை ஏற்படப்போவதாக செய்திகள் வெளியானமை குறித்து மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

நாட்டில் போதுமான அளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது. அதனால், மக்கள் பீதியடைந்து எரிபொருட்களை சேமித்து வைக்கவேண்டிய அவசியம் இல்லை. எரிபொருள் விநியோகத்தை சீராக அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது - என்றும் அவர் சொன்னார்.

## முன்னாள்...

ஓய்வூதியத்தை நிறுத்தவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

1986ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க ஜனாதிபதி உரிமை சட்டம் மற்றும் 1977ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்ற ஓய்வூதிய சட்டத்தின் கீழ் வழங்கப்படும் சலுகைகளை மட்டுப்படுத்த இரு வரைவு சட்டமூலங்களை வகுக்க சட்ட வரைவாளர்களுக்கு அறிவுறுத்துவதற்காக நீதி அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

புதிதாக வரையப்படும் சட்டமூலங்களில் முன்னாள் ஜனாதிபதிகள், அவர்களின் குடும்பத்தவருக்கு வழங்கப்பட்ட சிறப்பு சலுகைகள், பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் (5 ஆண்டுகள்) முடிந்த பிறகு அவர்களுக்கான ஓய்வூதியம் வழங்கலும் நிறுத்தப்படவுள்ளன.

அரசாங்கத்தின் "வளமான நாடு அழகான வாழ்க்கை" என்ற கொள்கை பிரகடனத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைய இந்த சட்ட வரைவுகள் நிறைவேற்றப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## யாழில்...

மேலும், "வடக்கு, கிழக்கில் விளையாட்டுத்துறையை மேம்படுத்தவதற்கான திட்டங்களை விளையாட்டுத் துறை அமைச்சர் வகுத்துள்ளார். இது விடயத்தில் அவர் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறார். அமைச்சர், பிரதி அமைச்சர் ஆகியோர் அடிக்கடி யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வருகின்றனர். விளையாட்டு கழகங்களை சந்தித்து கலந்துரையாடுகின்றனர், குறைகளை கேட்டறிந்து அவற்றை தீர்த்து வைக்கின்றனர்.

யாழ்ப்பாணத்துக்கே உரிய தனித்துவமான சர்வதேச மைதானத்தை ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் அமைத்து, அங்கு சர்வதேச போட்டிகளையும் நடத்துவோம். கடந்த 76 ஆண்டுகளாக கண்டுகொள்ளப்படாத வடக்கு, கிழக்கு விளையாட்டுத்துறை பற்றி தற்போது புதிய கோணத்தில் சிந்திக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் உள்ளக விளையாட்டு அரங்கும், பயிற்சி நிலையமும் அமைக்கப்படவுள்ளது.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகள் மற்றும் அங்கு வாழும் இளைஞர்களின் விளையாட்டு ஆற்றலை இனங்காண்பதற்கு கடந்த காலங்களில் அவதானம் செலுத்தப்படவில்லை", என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## மயங்கி...

கேக் உண்டுவிட்டு, தேநீர் அருந்தியுள்ளார். இதைத் தொடர்ந்து சிறிது நேரத்திலேயே மயங்கி விழுந்துள்ளார். வீட்டிலிருந்தவர்கள் அவரை யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு சேர்ப்பித்த நிலையில் அவர் உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். சடலம் உடற்கூராய்வு பரிசோதனைக்காக மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தண்டவாளத்தில்...

உயிரிழந்தார்.

குறித்த இளைஞர் புங்கன்குளம் ரயில் நிலையம் அருகே தண்டவாளத்தில் அமர்ந்திருந்தார். அந்தச் சமயம் வந்த ரயில் அவரை மோதித் தள்ளியதில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்றும் தெரிய வருகிறது. (ஐ)

## பாராளுமன்...

எழுப்ப எங்களுக்கு அனுமதி இல்லாததால் நாங்கள் வெளிநடப்பு செய்ய முடிவுசெய்தோம் - இது மிகவும் தீவிரமாகி வருகிறது," என்று எதிர்க்கட்சி கொறடா கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

"இந்த நெருக்கடி இலங்கையை பெரிதும் பாதிக்கப்போகிறது. மேலும் கேள்விகளை எழுப்ப முடியாது நாம் தடுக்கப்பட்டது நியாயமற்றது" என்றும் அவர் கூறினார்.

தமிழ் மக்களின் பிரச்னைகளை எழுப்புவதற்காக இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் விவாதத்தில் பங்கேற்பது என்று முடிவு எடுக்கப்பட்டது என்று இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

அத்துடன், "முக்கியமான பிரச்னைகள் குறித்த விவாதங்களைத் தடுப்பது சரியல்ல. பிரதான எதிர்க்கட்சி வெளிநடப்பு செய்த முடிவு நியாயமானது", என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதேசமயம், நேற்றைய தினம் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க பாராளுமன்றத்துக்கு வருகை தந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கரவெட்டி...

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் அதிகார பதவி தெரிவு நேற்று செவ்வாய்க்கிழமை சபையின் சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

தவிசாளரை தெரிவு செய்வதற்கு பகிரங்க வாக்கெடுப்பா அல்லது இரகசிய வாக்கெடுப்பா நடத்துவது என்று கோரப்பட்டது. தமிழ் அரசு கட்சி, ஈ. பி. டி. பி. ஆகியன பகிரங்க வாக் கெடுப்பை கோரின. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, தேசிய மக்கள் சக்தி ஆகியன இரகசிய வாக்கெடுப்பை கோரின.

பெரும்பான்மையினரின் கோரிக்கைக்கு அமைவாக இரகசிய வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு எதிராக ஈ. பி. டி. பியின் உறுப்பினர் ஒருவர் வெளிநடப்பு செய்தார். இதைத் தொடர்ந்து, 7 பேர் வாக்கெடுப்பில் நடுநிலையை அறிவித்தனர்.

தவிசாளர் பதவிக்கு இலங்கை தமிழ் அரசு கட்சியின் சார்பில் குமாரசாமி சுரேந்திரன், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் தம்பையா சிவராசா ஆகியோர் போட்டியிட்டனர். இதில், சுரேந்திரன் 13 ஆசனங்களை பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்த சிவராசாவுக்கு 12 வாக்குகள் கிடைத்தன.

உப தவிசாளருக்கான தெரிவு பகிரங்கமாக நடத்தப்பட்டது. தமிழ் அரசு கட்சி சார்பில் போட்டியிட்ட தியாகராசா தயாபரன் 14 வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் [illegible] பரஞ்சோதி 11 வாக்குகளை பெற்றார். (ஐ)

## தமிழ்அரசு...

உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, இலங்கை தமிழ் அரசு கட்சியின் உதயகுமார் யுகதீஸ் தவிசாளராகவும் கனகரத்தினம் சிறீகாந்தரூபன் உப தவிசாளராகவும் முன்மொழியப்பட்டனர். வேறு தெரிவுகள் இன்மையால் இருவரும் ஒரு மனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

20 உறுப்பினர்களை கொண்ட பருத்தித்துறை பிரதேச சபைக்கு அண்மையில், நடந்த உள்ளூராட்சி தேர்தலில் இலங்கை தமிழ் அரசு கட்சி 9 உறுப்பினர்களும் தேசிய மக்கள் சக்தி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சார்பில் தலா 4 உறுப்பினர்களும் சுயேச்சை குழு 2 ஆசனங்களையும் ஈ. பி. டி. பி. ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மண்டைதீவு...

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளிலிருந்து இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்ட 80இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். மண்டைதீவு செம்பாட்டு தோட்டம் புனித தோமையார் தேவாலய வளாகத்தில் இனங்காணப்பட்ட மனித புதைகுழியுடன் தொடர்புடைய கொலைகள் பற்றியும் இராணுவத்தின் துணை ஆயுதக் குழுவான ஈ. பி. டிபியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவை விசாரணை செய்யவேண்டும் - என்றார்.

இந்த விடயம் தொடர்பில், வடக்கு, கிழக்கு மனித உரிமைகள் அமைப்பால் வெளியிடப்பட்ட அறிக்கையை சமர்ப்பித்ததோடு, அதிலுள்ள விடயங்களையும் மேற்கோள் காட்டினார். அதில், கடந்த 2010ஆம் ஆண்டுக்கு முற்பட்ட - 30 ஆண்டுகளுக்கு மேல் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட யுத்தம் காரணமாக காணமல் ஆக்கப்பட்டவர்களும் படுகொலை செய்யப்பட்டவர்களும் மனித எலும்புக்கூடுகளாகவும் எச்சங்களாகவும் புதைகுழிகளிலிருந்து மீட்கப்படுவதை தாங்களும் அறிவீர்கள். அந்த வகையில் மண்டைதீவு செம்பாட்டுத் தோட்டம், புனித தோமையார் ஆலயத்தின் அருகாமை, திருக்கேதீஸ்வரம், முல்லைத்தீவு குமுழமுனை, கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட மனித புதைகுழிகளின் வரிசையில் தற்போது, செம்மணியின் (அரியாலை) சித்துப்பாத்தி பகுதியிலிருந்தும் மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் இவை முழுமையாக தமிழ் மக்களுடையவைதான் என்பது தெளிவாகிறது.

சித்துப்பாத்தி மயானத்தை அண்மித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின்போது மீட்கப்பட்ட கைக்குழந்தைகள், பெண்கள், ஆண்கள், சிறுவர், சிறுமியரின் எலும்புக்கூடுகள் எந்த ஆடைகளுமற்று, அடித்து நொருக்கி சித்திரவதை செய்து கொல்லப்பட்டவர்களுடையவை என்பதையே நீதித்துறையும் தடயவியல் நிபுணர்களும் குறிப்பிடுகின்றனர். அந்த வகையில் மனித புதைகுழிகள் மலிந்த இடமாகவே வடக்கு, கிழக்கு பகுதிகள் உள்ளன என்பதை அமைச்சர் அறிவாரா?

தற்போது சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தோண்டி எடுக்கப்படும் மனித எலும்புக்கூடுகள் தொடர்பில் பக்கச்சார்பில்லாத - நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உண்மைகள் வெளிக்கொணரப்படுமா? இதற்கு முன்னர் நடைபெற்ற முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிகளின் அகழ்வுப் பணிகள் நிறைவுபெற்றுவிட்டனவா என்பதையும், அதுசார்ந்து நீதித் துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் எவை என்பதையும் அமைச்சர் இந்த சபைக்கு அறிவிப்பாரா?

திருக்கேதீஸ்வரம் பகுதியில் அடையாளப்படுத்தப்பட்ட மனிதப்புதை குழியின் அகழ்வு கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதன் உண்மைநிலை எப் போது வெளிவரும் என்பதை அமைச்சர் இந்த சபைக்கு அறிவிக்க வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கையில் ஊழலைக் கட்டுப்படுத்த மிகப்பெரும் சீர்திருத்தங்கள் அவசியம்!

**சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்து**

கொழும்பு, ஜூன் 18

**இலங்கையில் ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கு பாரிய சீர்திருத்தங்கள் தேவைப்படும் என சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்தின் முதல் துணை நிர்வாக இயக்குநர் கீதா கோபிநாத் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தின் நிர்வாக சீர்திருத்தங்கள் குறித்த செயல் திட்டத்தை செயல்படுத்துவது மிகவும் முக்கியமானது.

வெளிப்புறக் கடனைக் குறைக்க நிறைய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், உள்நாட்டுக் கடன் இன்னும் அதிகமாக உள்ளது. எனவே, அதனை குறைப்பதற்கு நல்ல நிதிக் கொள்கையை உறுதியாக செயல்படுத்துவது மிகவும் முக்கியமானது.

இன்று, துணிச்சலான சீர்திருத்தங்கள் மற்றும் இலங்கை மக்களின் அர்ப்பணிப்பு காரணமாக, பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதிலும், மக்கள் எதிர் கொள்ளும் கஷ்டங்களைக் குறைப்பதிலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் மருந்துகள் மீண்டும் கிடைக்கின்றன. பணவீக்கம் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வரி வருமானம் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமாக அதிகரித்துள்ளது-என்றார். (அ)

# தரம் 1 முதல் 6 வரை புதிய பாடத்திட்டம்!



கொழும்பு, ஜூன் 18

2026 ஆம் ஆண்டிலிருந்து 1 முதல் 6 ஆம் வகுப்பு வரை புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும் எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மேலும் 2028 ஆம் ஆண்டு முதல் 10 ஆம் வகுப்புக்கும் புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

அதன்படி 2029 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகள் புதிய பாடத்திட்டத்தின் கீழ் நடைபெறும் எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். (அ)

# சாமர சம்பத் எம்.பி. மீதான நிதி முறைகேடு வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 18

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க மீதான நிதி முறைகேடு தொடர்பான வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சாமர சம்பத் தசநாயக்க மீதான நிதி முறைகேடு தொடர்பான விசாரணைகள் இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருவதாக லஞ்ச ஒழிப்பு ஆணையகம் நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

சாமர சம்பத் தசநாயக்க கடந்த 2016 ஆம் ஆண்டு இராஜாங்க அமைச்சராக இருந்த காலத்தில், மாகாண சபைக்குச் சொந்தமான நிலையான வைப்பு கணக்குகளை அவர் திரும்பப் பெற்றதால், அரசாங்கத்திற்கு 16 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி இழப்பு ஏற்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டுகளை அடுத்து அவருக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் தசநாயக்கவும் விசாரணைக்காக நீதிமன்றத்தில் முன்னிலையாகினார்.

நீதிமன்றத்தில் சாட்சியங்களை முன்வைத்த இலஞ்ச ஒழிப்பு ஆணையகத்தின் சார்பாக ஆஜரான அதிகாரிகள், இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்னும் முடிவடையவில்லை. விசாரணையை முடித்து, நீதிமன்றத்திற்கு உண்மைகளை அறிக்கை செய்ய ஒரு திகதியை வழங்குமாறு அதிகாரிகள் நீதிமன்றத்தைக் கோரினர்.

அதனையடுத்து முன்வைக்கப்பட்ட உண்மைகளைக் கருத்தில் கொண்டு, வழக்கு எதிர்வரும் நவம்பர் 18 அன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று நீதிபதி உத்தரவிட்டார். (அ)

# ரயில் கட்டுப்பாட்டாளர்கள் 48 மணி நேரப் புறக்கணிப்பு

கொழும்பு, ஜூன் 18

ரயில் கட்டுப்பாட்டாளர்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல், 48 மணி நேர பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

நீண்ட காலமாகத் தீர்க்கப்படாத நிர்வாக பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்டு பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக ரயில் கட்டுப்பாட்டாளர்கள் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளாவன,

மாவட்ட போக்குவரத்து பரிசோதகர், போக்குவரத்து/வர்த்தக பதவிக்கான ஆட்சேர்ப்பில் தாமதம்,

கட்டுப்பாட்டாளர்களின் பதவி உயர்வில் தாமதம்,

விசேட தர நிலையை உடைய கட்டுப்பாட்டாளர்களின் வேதனப் பிரச்னை தீர்க்கப்படாமை,

திணைக்கள பரிசோதனைகளை நடத்துவதில் உள்ள தாமதம்,

செயல்திறன் நிவாரணங்களை வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதம்,

அலுவலக சேவைகளுக்காக ஊழியர்களை இணைக்காமை,

நலன்புரி நடவடிக்கைகள் தொடர்பான கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமை,

இலங்கை தொழில்நுட்ப சேவைக்காக மீள வழங்கப்பட்டுள்ள பதவி உயர்வு ஒழுங்கு முறையை, மீண்டும் கட்டுப்பாட்டாளர்கள் பதவிக்காகச் செயற்படுத்துவதற்கு அனுமதி கோருதல்,

இலங்கை நிர்வாக சேவைக்கு விண்ணப்பிக்க மற்றொரு வாய்ப்பு வழங்கப்படல்.

போன்ற கோரிக்கைகளை முன்வைத்து, தொடருந்து கட்டுப்பாட்டாளர்கள் இந்த பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர். (அ)

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகள் கத்தோலிக்க திருச்சபை அதிருப்தி

கொழும்பு, ஜூன் 18

ஈஸ்டர் ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் குறித்து கத்தோலிக்க திருச்சபை அதிருப்தி வெளியிட்டுள்ளது.

2019 ஏப்ரல் 21ஆம் திகதி ஈஸ்டர் ஞாயிறன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான நீதிக்கான நடவடிக்கைகள் தற்போது அரசு மேற்கொண்டு வரும் போதிலும், இந்த செயல்முறை மெதுவாக நடைபெறுவதாக அது குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயம் கவனிக்கப்பட வேண்டியது என கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

தற்போதைய அரசாங்கம் ஆரம்பித்துள்ள புதிய விசாரணைகள் திருப்திகரமானவை என்றாலும், “மொத்த செயல்முறை மெதுவாகவே” நடைபெறுவதாக கத்தோலிக்க திருச்சபையின் பேச்சாளர் சிறில் காமினி பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

கடந்த ஆறு ஆண்டுகளில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. விசாரணைகள் முற்றிலும் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகே, மீண்டும் விசாரணைகள் ஆரம்பித்தன. ஆனால், மெதுவாக நடைபெறுவது நல்லது அல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, அரசு எந்தப் பகுதியில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை கவனிக்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், தாக்குதல் தொடர்பான வழக்குகளில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பங்களிப்பு திருப்திகரமாக இல்லையெனவும், எனவே தனிச்சிறப்பு வழக்கு நிருஜ் அலுவலகம் ஒன்று அமைக்கப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

# எரிபொருள் பற்றாக்குறை குறித்து போலியான செய்தி

**நம்ப வேண்டாம் என்கிறது எரிசக்தி அமைச்சு**

கொழும்பு, ஜூன் 18

எரிபொருள் பற்றாக்குறை குறித்த போலி மற்றும் தவறான செய்திகளால் பொதுமக்கள் ஏமாற வேண்டாம் என எரிசக்தி அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் போர் சூழல் காரணமாக இலங்கையில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்று சமூக ஊடகங்களில் பரவும் தவறான செய்திகளை அவதானித்துள்ளதாக அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அடுத்த இரண்டு மாதங்களுக்கு தேவையான எரிபொருள் இருப்பு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் உள்ளதாகவும், முன்கூட்டியே கட்டளை வழங்கப்பட்ட எரிபொருள் இருப்புகளைப் பெற தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

எனவே, பொதுமக்கள் போலிச் செய்திகளை நம்பி ஏமாற வேண்டாம் என எரிசக்தி அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது. (அ)

# தேர்தலில் போட்டியிட்ட 2,433 வேட்பாளர்கள் வரவு - செலவு அறிக்கை சமர்ப்பிக்கவில்லை

கொழும்பு, ஜூன் 18

2025 உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்டவர்களில் 2,433 வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தங்கள் வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்கத் தவறிவிட்டதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், குறித்த வேட்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கத் தேவையான அறிவுறுத்தல்கள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் செலவின ஒழுங்குமுறைச் சட்டத்தின் கீழ், வருமானம் மற்றும் செலவு விவரங்களை மொத்தமாக 78,725 வேட்பாளர்கள் சமர்ப்பிக்கவேண்டும்.

இதில், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களில், 76,292 பேர் தங்கள் அறிக்கைகளைச் சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரிகளிடம் சமர்ப்பித்துள்ளனர்.

இருப்பினும், 2,433 வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் உரிய திகதிக்குள், தங்கள் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் குறிப்பிட்டார். (அ)

# நெலுவ பிரதேச சபையின் அதிகாரம் சஜித் தரப்பிடம்

கொழும்பு, ஜூன் 18

காலி மாவட்டம் நெலுவ பிரதேச சபையின் அதிகாரத்தையும் தவிசாளர் பதவியையும் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சி தம்வசப்படுத்தியது.

நெலுவ பிரதேச சபையின் தவிசாளரைத் தேர்ந்தெடுப்பதற்காக நேற்று வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இதன்போது, பெரும்பான்மை ஆதரவை பெற்ற ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சி நெலுவ பிரதேச சபையின் ஆட்சியைக் கைப்பற்றியதுடன் அதன் தவிசாளராக அஜித் சந்தன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.